

# 30 நாட்கள்

## ஜெபக் கையேடு

இஸ்லாமிய உலகிற்கு ஜெபிக்க

**ஓர் அறைகூவல்**

ஏப்ரல் 24 – மே 23

**2020**

For Private Circulation Only.

# 30 நாட்கள்
## ஜெபக் கையேடு
இஸ்லாமிய உலகிற்கு ஜெபிக்க
**ஓர் அறைகூவல்**

இஸ்லாமிய உலகிற்காக 30 நாட்கள் ஜெபிக்க இந்த 2020 ஆம் ஆண்டின் பதிப்பிற்கு உங்களை அன்புடன் வரவேற்கிறோம்.

இந்த 30 நாட்களில், உலகளாவிய திருச்சபையானது இஸ்லாமிய உலகை புரிந்து கொள்ள உதவி செய்வது நம்முடைய குறிக்கோள்களில் ஒன்றாகும். நாம் இருக்கும் பகுதியில் உள்ள இஸ்லாமியரை பார்த்ததைக் கொண்டோ அல்லது நாம் அவர்களைப் பற்றி படித்தவைகளைக் கொண்டோ அல்லது செய்திகளில் நாம் கண்டவற்றைக் கொண்டோ, எல்லா முஸ்லீம்களும் இப்படித்தான் இருப்பார்கள் என்று தீர்ப்பது மிகவும் எளிதானது. ஆனால், நிச்சயமாக அது உண்மையில்லை. ஒரு முஸ்லீமாக இருப்பது எப்படி என்பதில் இஸ்லாமியருக்குள் பலவிதமான வேறுபட்ட கருத்துக்கள் உள்ளது. இஸ்லாமிய கலாச்சாரத்தை பலவிதமான கருத்துக்கள், நிரப்புவதும் அது மாறிக்கொண்டே இருப்பதும் வரலாறு முழுவதும் ஆண்டாண்டுகளாய் தொடர்கின்றது. இந்த ஆண்டிற்கான இக்குறிப்பேட்டில் இந்த கருத்துக்கள் சிலவற்றை ஆய்வு செய்கிறதாய் அமைக்கப்பட்டுள்ளது.



முஸ்லீம் மக்கள் தங்கள் விசுவாசம், மத நம்பிக்கை மற்றும் சித்தாந்தங்கள் போன்றவைகளை எப்படி வெவ்வேறு விதமாக வெளிப்படுத்துகின்றார்கள் என்பதை இதன் மூலம் நீங்கள் அறிந்து கொள்வீர்கள். மேலும் அது நீங்கள் அவர்களுக்காக அதிகமாக ஜெபிக்க தூண்டுகோலாய் அமையும். உங்கள் ஜெபங்களுக்கு நன்றி.

**30 நாட்கள் சர்வதேச குழு**

Facebook.com/pray 30 days

Instagram.com/pray 30 days

twitter.com / pray 30 days

## முஸ்லிம் உலகத்தில் உபசரிப்பு (விருந்தோம்பல்):

- உபசரிப்பு என்பது இஸ்லாமிய கலாச்சாரத்தில் மிகவும் முக்கிய பங்கு வகிக்கிறது. விருந்தினருக்கு அன்பையும் உதாரத்துவமாக கொடுப்பதும் இறைவனுக்கு செய்யும் கடமையாகக் கருதப்படுகிறது. ஆகவே, விருந்தாளியை கனப்படுத்தி வரவேற்பது, இறைவனை கனப்படுத்தி வரவேற்பது போன்றது என்று முஸ்லிம்கள்கள் அநேகர் நினைக்கின்றனர்.

- இஸ்லாமிய உலகில் விருந்தோம்பல் என்பது உதாரத்துவத்தையும் சுய தியாகத்தையும் குறிக்கிறது. ஒருவனிடம் எவ்வளவு குறைவுள்ளதாயிருந்தாலும் அதை விருந்தினர்களுக்கு பகிர்ந்தளிப்பதே உயர்ந்ததாய் எண்ணப்படுகிறது.

- விருந்தோம்பலில் உணவு மிக முக்கிய பங்கு வகிக்கிறது. ரமலான் மாதத்தில் நோன்பு இருப்பது மிக முக்கியமானது. நோன்பின் முடிவிலே அதாவது சூரிய அஸ்தமனத்திற்குப் பின் நடக்கும் விருந்து பெரிய அளவிலும் இலவசமாக பிறருக்கு பகிர்ந்தளிப்பதுமாயிருக்கிறது.

- விருந்து உபசரிப்பதன் மூலம் மக்கள் ஒன்றுபடுகின்றனர். ஒருவரோடு ஒருவர் தனியாக, குழுவாக பேசவும் பழகி புரிந்து கொள்ளவும் மார்க்க வளர்ச்சிக்கும் இது உதவுகிறது.

- முஸ்லீம் கலாச்சாரத்திலுள்ள பலவிதமான உபசரிப்புகளை நீங்கள் அறிந்து அதற்கேற்ப ஜெபிப்பீர்கள் என நம்புகிறோம். இஸ்லாமியர்களுக்காக ஜெபிக்க உதவும் 30 நாள் ஜெப கையேட்டினைக் குறித்து அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்.



### 30 நாள் என்பது எப்படி ஆரம்பிக்கப்பட்டது?

- மத்திய கிழக்கு பகுதியில் ஊழிய தலைவர்கள் சிலர் குழுவாக ஒன்று கூடி ஜெபித்துக் கொண்டிருந்தனர். முஸ்லிம் மக்கள் மீதுள்ள தேவனுடைய அன்பை தீவிரமாய் வெளிப்படுத்தவும், அவர்களை முக்கியப்படுத்தி அவர்களுக்காக ஜெபிக்க வேண்டும் என்று உணர்த்தப்பட்டனர். அதன் விளைவே ரமலான் மாதத்தில் முஸ்லிம் மக்களுக்காக ஜெபிக்க 30 நாள் ஜெபக்கையேடு உருவானது.

### யார் இதன் செய்திகளையும் வழிகாட்டுதலையும் எழுதுவது:

- உலகமெங்கிலுமுள்ள பல கிறிஸ்தவ சபைகள் ஸ்தாபனங்களைச் சார்ந்த ஒரு குழு இந்த 30 நாள் ஜெப கையேட்டை உருவாக்குகிறது. அவர்களின் அநேகர் முஸ்லிம் மக்கள் மத்தியில் வாழ்ந்தவர்கள், கூட வேலை செய்தவர்கள், மேலும் அவர்களை நேசித்தவர்கள், சிலர் கட்டுரைகளை கொடுப்பார்கள். சிலர் ஒவ்வொரு வருடமும் மொழிபெயர்ப்பு செய்தும் சிலர் புத்தக வடிவமைப்பு மற்றும் புத்தக விநியோகம் செய்தும் உதவுகின்றனர்.

### யாருக்காக ஜெபிக்க வேண்டும் என்பதை நீங்கள் எப்படி தீர்மானிக்கிறீர்கள்?

- உலகம் முழுவதிலிருந்தும் கொடுக்கப்படுகிற கட்டுரைகளிலிருந்து ஜெபக்குறிப்புகள் தேர்ந்தெடுக்கப்படுகிறது. ஜெபத்தை தூண்டுகிற விருப்பமுள்ளவர்களிடமிருந்து ஒரு வருடத்துக்கான குறிப்புகள் பெறப்படுகின்றன.

### நாம் எப்படி ஜெபிக்க வேண்டும்?

- ஜெபத்திற்காக கொடுக்கப்படும் யோசனைகளை ஆரம்ப குறிப்பாக கொள்ள வேண்டும். அவற்றில் சில வேத வசனங்களும் நம்மை உற்சாகப்படுத்த கொடுக்கப்பட்டிருக்கும். கிறிஸ்து நம்மை நேசித்து தமது நற்செய்தியை நமக்கு அறிவித்ததுபோல நாமும் நாம் படித்து, அறிந்த மக்களின் தேவைகளை அறிந்து அவர்கள்மீது அன்பு செலுத்தி அவர்களுக்காக ஜெபிப்போம்.

# இஸ்லாமில் உள்ள இயக்கங்கள்

இஸ்லாமில் சன்னி மற்றும் ஷியா என்கின்ற இரண்டு பெரும் பிரிவுகள் உள்ளன. இந்த இரண்டு பிரிவுகளுக்குள் பல வகையான இயக்கங்களும், அமைப்புகளும் உள்ளன. ஒரு முஸ்லீம் தனது அன்றாட வாழ்க்கையில் தொழுகை முறை மற்றும் கைக்கொள்ள வேண்டிய சட்ட திட்டங்கள் என்னென்ன என்பதை இந்த ஒவ்வொரு இயக்கமும் வெவ்வேறு விதத்தில் பட்டியலிடுகின்றன.



கிறிஸ்தவம் மற்றும் இந்து போன்ற அனைத்து மதங்களிலும் பல்வேறு காலகட்டங்களில் புதிய புதிய தலைவர்கள் தோன்றுவதும், அவர்களால் நிறுவப்பட்ட அமைப்புகளும், இயக்கங்களும் இன்றளவிலும் பெருகி வருவதைப் போன்றே இஸ்லாத்திலும் பல்வேறு காலகட்டங்களில் தோன்றிய தலைவர்கள் தொடங்கிய பலதரப்பட்ட அமைப்புகளும் இயக்கங்களும் இன்றளவும் பெருகி வருகிறது. இவை ஒவ்வொன்றும் தேசியம், பொருளாதாரம், அரசியல், சமூகம், குடும்பம் மற்றும் தனி மனிதர்கள் கைக்கொள்ள வேண்டிய வழிமுறைகளைப் பற்றிய கருத்துக்களை உடையதாய் இருக்கின்றது.

இந்த இயக்கங்களின் தன்மைகள் சிலவற்றை நாம் அறிந்துக் கொண்டு, அந்த புரிதலோடு அவர்களின் சமாதானத்திற்காகவும், இரட்சிப்பிற்காகவும் இந்த 30 நாட்களும் ஜெபிப்போம்.

தேசிய குடியுரிமை பதிவில் (சேஊ) இல்லாத சுமார் 19 இலட்சம் பெங்காலி இஸ்லாமியர்களும் அகதிகளாக மாறும் நிலை அஸ்ஸாமிலிருந்து மாற ஜெபிப்போம்.

தற்போது கொரோனா வைராசால் உகான் நகர் உட்பட்ட சீனா முழுவதும் மட்டுமின்றி, உலகில் பல்வேறு நாடுகளிலும் வேகமாக பரவி வருகிற கொள்ளை நோயினால் பாதிக்கப்பட்டுள்ள ஆயிரக்கணக்கானோர் பூரண சுகமடைய ஜெபிப்போம்.

ஆப்கானிஸ்தான், அல்பேனியா, அல்ஜீரியாஇந்த நாடுகளின் இரட்சிப்பிற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

ஆந்திரப்பிரதேசத்தில் வாழும் 71 இலட்சம் இஸ்லாமியர்களை தேவன் சந்திக்கும்படி ஜெபியுங்கள்.

மனுபுத்திரனே, உன் இடுப்பு நொறுங்கும்படி பெருமூச்சுவிடு. அவர்கள் கண்களுக்கு முன்பாக மனங்கசந்து பெருமூச்சுவிடு. எசேக்கியல் 21:6

**நாள் 01 ஏப்ரல் 24**

## ஜெபக்குறிப்புகள்:

1. உலகெங்கிலும் உள்ள பல ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் உங்களுடன் இணைந்து இந்த 30 நாட்களும் இஸ்லாமியருக்காக ஜெபிக்கின்றார்கள். இயேசு ஜெபித்தது போல கிறிஸ்துவின் சரீரமானது ஒருமைப்பாட்டில் தேறினவர்களாய் இஸ்லாமிய உலகம் இயேசுவின் அன்பை அறிந்துக் கொள்ளும்படி ஜெபியுங்கள் (யோ.17:20-23).
2. கிறிஸ்தவர்கள் தங்களுடைய வித்தியாசத்தை, அன்பை வெளிக்காட்டுவதின் மூலம் இஸ்லாமியருக்கு முன்மாதிரியாக விளங்க ஜெபியுங்கள்.
3. முஸ்லீம்கள் அனைவரும் ஈஸா (இயேசு) முக்கியமான நபி (தீர்க்கதரிசி) மட்டுமல்ல நித்தியத்திற்கான வழியே அவர்தான் என்பதை இந்த நோன்பு நாட்களில் உணர்ந்திட ஜெபியுங்கள்.
4. ஒவ்வொரு இஸ்லாமிய இனங்கள், அமைப்புகள் மற்றும் இயக்கங்களுக்கு என ஊழியர்கள் எழும்பிட பாரத்தோடு ஜெபியுங்கள்.
5. தேவ இராஜ்ஜியத்தின் சுவிசேஷம் சகல ஜனங்களுக்கும் அறிவிக்கப்படும். பின்பு முடிவு வரும் என்று பரிசுத்த வேதாகமம் கூறுகிறது. இன்றும் இயேசுவை கிறிஸ்துவாக கேள்விப்படாத பல பெரிய இனக்கூட்டங்கள் முஸ்லீம்களில் உண்டு. சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

# துருக்கியிலுள்ள சூஃபிஸம்

சூஃபிஸம் என்கிற இயக்கமானது உலகமெங்குமுள்ள இஸ்லாமியர்களிடம் பரவி இருக்கிறது. இஸ்லாம் தொடங்கியவுடனே வெளிப்பட்ட இந்த இயக்கமானது இஸ்லாமிய நம்பிக்கையின் உள்ளார்ந்த நம்பிக்கையின் பரிணாமங்களை வலியுறுத்துகிறதாய் இருக்கிறது. சுய தியாகங்கள் மற்றும் தியானத்தில் மூழ்கியிருப்பது அதாவது ஆடிப்பாடி தன் நிலையை மறப்பதன் மூலம் தெய்வீக நிலையை தொடர்வதே சூஃபிஸம் ஆகும்.



ஒரு தலைவரின் கீழ் வரிசை கிரமமாய் இயங்கும் ஒவ்வொரு சூஃபியும் பெரும் சக்தி படைத்தவராய் துருக்கியிலுள்ள தன் சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகிறவராய் உள்ளார். பல நாடுகளில் இந்த சூஃபிஸம் தடை செய்யப்பட்டிருந்தும் துருக்கியில் இந்த இயக்கம் பரவலாக உள்ளது. துருக்கியிலுள்ள அரசியல் தலைவர்களில் பலர் சூஃபிகளாய் உள்ளனர். உலக காரியங்களிலிருந்து தங்களை விடுவித்து இறைவனின் அன்பை பெறவும், பூரண ஞானமடைந்து இறைவனை அடைவதே சூஃபிகளின் இறுதி இலக்காகும். இவர்கள் ஆவிகளோடு தொடர்பு கொள்வதிலும், மாய மந்திர வித்தைகளை ஏவுவதிலும் ஆர்வம் கொண்டுள்ளனர்.

தமிழ்நாட்டில் உள்ள ஏர்வாடி தர்காவில் மந்திரம், சூனியத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் இயேசுவின் நாமத்தால் விடுவிக்கப்பட்டு சபையில் சேர்க்கப்படவும், இங்கு கிரியை செய்யும் ஆவிகள் துரத்தப்படவும் ஜெபிப்போம். ஏர்வாடி தர்காவில் விடுதலை தேடி உள்ளே போனவர்கள் இதுவரை எவரும் விடுதலை பெறவேயில்லை.

சீனாவில் வாழும் அனைத்து இஸ்லாமியர்களும் இயேசுவின் அன்பை அறிந்து கொள்ள, சீன விசுவாசிகள் தொடர் ஜெபங்களை ஏறெடுக்க ஜெபியுங்கள்.



## ஜெபக்குறிப்புகள்:

1. எட்டு கோடி மக்கள் தொகை கொண்ட துருக்கி நாட்டில் இந்த சூஃபிஸ ஆதிக்கத்திலிருந்து விடுபட ஜெபியுங்கள்.
2. இங்கு இஸ்லாம் பின்னணியிலிருந்து இரட்சிக்கப்பட்ட விசுவாசிகள் சில ஆயிரங்கள் உண்டு. இவர்கள் விசுவாசத்தில் உறுதியாக நிற்கவும், இங்குள்ள சூஃபிகளுக்கு பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை வெளிப்படுத்துகிறவர்களாக இருக்கவும் ஜெபியுங்கள்.
3. இவர்களை சந்திக்கும் பாரமுள்ள ஊழியர்கள், ஊழியங்கள் எழும்பிட ஜெபியுங்கள். விசுவாசிகள் சீஷர்களாய் மாறி கனி கொடுக்கவும் ஜெபியுங்கள்.
4. சங்.36:5-9 வரையிலான வசனங்களை தியானித்து இந்த சூஃபிகள் தேவன்பால் ஈர்க்கப்பட ஜெபியுங்கள்.

பஹ்ரைன், பங்களாதேஷ், பெனின் இந்த நாடுகளின் இரட்சிப்பிற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

அஸ்ஸாமில் வாழும் 84 இலட்சம் இஸ்லாமியர்களுக்காக ஜெபியுங்கள்.

# டிஜானியாக்கள்



டிஜானியா என்பது சூஃபி இயக்கத்திலிருந்து தோன்றிய ஓர் அமைப்பாகும். ஆனால், சூஃபிஸம் போன்று பழமைவாத அடிப்படைகளில் அதிக கவனம் செலுத்தாமல் சமூக மாற்றத்திலும், இஸ்லாமிய அடிமட்ட எழுப்புதலிலும் கவனம் செலுத்துகின்றது. சூஃபிஸத்தில் உள்ளது போன்றே தலைவரிலிருந்து இயங்கும் ஓர் வரிசை முறை உண்டு. மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள செனகல், காம்பியா, மௌரிடானியா, மாலத்தீவு, கயானா, நைஜர், சாட், கானா, வடக்கு மற்றும் தென்மேற்கு நைஜீரியா மற்றும் சூடானில் சில பகுதிகளில் இந்த இயக்கம் பரவியுள்ளது.

ஒவ்வொரு நாளும் தனித்தனி நபராகவும், இந்த இயக்கத்தின் கூடுகையின் போதும் திரும்பத் திரும்ப சொல்ல வேண்டிய மந்திரங்கள் இந்த இயக்கத்திற்கு உண்டு. இதுவரை சந்திக்கப்படாத ஆயிரக்கணக்கான இஸ்லாமிய இன குழுக்கள் இந்த டிஜானியா இயக்கத்தின் ஆதிக்கத்தில் உள்ளது. சில நாடுகளில் இவ்வியக்கத்தின் தலைவர்கள் மிகுந்த செல்வாக்கு படைத்தவர்களாக உள்ளனர்.

வடகிழக்கு மாநிலமான அஸ்ஸாமில் 35% இஸ்லாமியர்கள், சமாதானமாய் வாழவும், நற்செய்தியினால் சந்திக்கப்படவும், இரட்சிக்கப்படவும் ஜெபியுங்கள்.

உள்நாட்டுப்போர், வறுமை, பொருளாதார வீழ்ச்சி, தீவிரவாதம், பாதுகாப்பற்ற சூழ்நிலையினால் தங்கள் சொந்தத் தேசங்களிலிருந்து அகதிகளாக வெளியேறுகின்ற ஆப்பிரிக்க இஸ்லாமியர்களுக்காகவும் ஜெபிப்போம்.

கர்த்தர் என் விண்ணப்பத்தைக் கேட்டார். கர்த்தர் என் ஜெபத்தை ஏற்றுக் கொள்ளுவார் - சங்கீதம் 6:9.



## ஜெபக்குறிப்புகள்:

1. இந்த இயக்கத்தின் மாய வலையில் சிக்கி இருளின் ஆதிக்கத்தில் உள்ள பல ஆயிரக்கணக்கான இஸ்லாமிய குழுக்கள் விடுவிக்கப்பட ஜெபியுங்கள்.
2. இந்த மக்கள் இனங்கள் சிலவற்றில் கிறிஸ்துவின் இயக்கமும் தொடங்கியுள்ளது. அவைகள் வளர்ந்து பெருக ஜெபியுங்கள்.
3. இந்த இயக்கங்கள் நடுவே நடைபெறும் ஊழியங்களுக்காகவும் இன்னமும் பல ஊழியர்கள் எழும்பிடவும் ஜெபியுங்கள்.
4. தேவனின் அன்பை விளக்கும் சங்.136-ஐ திரும்பத் திரும்ப சொல்லும் பழக்கமுடைய கிறிஸ்தவர்கள், மாய மந்திரங்களை திரும்பத் திரும்ப சொல்லும் இந்த இயக்கத்தில் உள்ளவர்களுக்காக மன்றாடி ஜெபிக்க, செயல்பட ஜெபியுங்கள்.

புருனே, பல்கேரியா, கேமரூன் இந்த நாடுகளின் இரட்சிப்பிற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

பஞ்சாப்பில் வாழும் 4 இலட்சம் இஸ்லாமியர்களை தேவன் சந்திக்கும்படி ஜெபியுங்கள்.

# எகிப்து மற்றும் சூடானிலுள்ள நியூபியர்கள்



6 ஆம் நூற்றாண்டில் தோன்றிய புகழ் பெற்ற நாகரீகங்களில் ஒன்றையும், மூன்று இராஜ்ஜியங்களை உருவாக்கிய பெருமையும் படைத்தவர்களாய் நியூபியர்கள் உள்ளனர். ஆப்பிரிக்க திருச்சபைகளால் நிறைந்த அதிக எண்ணிக்கையிலான கிறிஸ்தவர்களை கொண்ட பகுதியாக விளங்கிய இவ்விடம் 13 ஆம் நூற்றாண்டில் வருகை புரிந்த இஸ்லாமியர்களால் நிரப்பப்பட்டு உள்ளது. தற்போது இங்கு வெகு சில கிறிஸ்வர்களே உள்ளனர். நியூபியர்கள் பெரும்பான்மையினோர் ஆர்வத்துடன் சூஃபிஸத்தை பின்பற்றுகிறவர்களாக உள்ளனர்.

வேலையின்மையும், பல சூழ்நிலைகளின் காரணமாகவும் வளைகுடா நாடுகள் மற்றும் சவுதி அரேபியா போன்ற இடங்களுக்கு சென்ற ஆயிரக்கணக்கான நியூபியர்கள், அந்த நாடுகளில் உள்ள "வஹாபி" இயக்கத்தால் ஈர்க்கப்பட்டு அவர்களின் மதக்கடமைகளையும், உடைகளையும், செய்கைகளையம் பின்பற்றுகிறவர்களாய் உள்ளனர். இவர்கள் கிறிஸ்தவத்திற்கு மிகவும் எதிர்த்து நிற்கின்றவர்கள்.

அபுஅலி என்கின்ற நியூபியர் ஒருவர் இந்த சூஃபிஸத்தால் ஈர்க்கப்பட்டு தீவிரமாய் அதை பின்பற்றுகிறவரானார். ஆனால், இறைவனை தரிசிக்க விரும்பிய இவருக்கு ஏமாற்றமே உண்டான நிலையில் சுவிசேஷத்தால் தொடப்பட்டு, இயேசுவுக்கு நேராக நடத்தப்பட்டார்.

பீகாரிலுள்ள 2 கோடி இஸ்லாமியர்களுக்கு மேசியாவின் நற்செய்தி அறிவிக்கப்படவும், சந்திக்கப்படாத மக்கள் கூட்டத்தினரை சந்திக்க பெருமளவில் மிஷனரிகள் அனுப்பப்படவும் ஜெபிப்போம்.

லிபியா, எத்திரியா, சோமாலியா, மேற்கு சூடான், நைஜீரியா, கேமரூன், கென்யா போன்ற ஆப்பிரிக்க தேசங்களிலிருந்து இதுவரை அகதிகளாக ஐரோப்பியாவிற்குள் குடியேறியுள்ள மக்களின் தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

புர்கினாஃபாஸோ, சீனா, காமரோஸ் இந்த நாடுகளின் இரட்சிப்பிற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

சத்தீஸ்கரில் வாழும் 4 இலட்சம் இஸ்லாமியர்களை தேவன் சந்திக்கும்படி ஜெபியுங்கள்.

நாள் 04

ஏப்ரல் 27

## ஜெபக்குறிப்புகள்:

1. சூஃபிஸம் மற்றும் வஹாபிஸம் போன்ற இயக்கங்களால் கட்டப்பட்டிருக்கும் இந்த நியூபியர்கள் விடுவிக்கப்பட ஜெபியுங்கள்.
2. வேலைக்காக வெளிநாடுகளில் தங்கியிருக்கும் நியூபியர்கள் அங்குள்ள கிறிஸ்தவர்களால் இயேசுவை அறிந்து கொள்ள ஜெபியுங்கள்.
3. இந்த எதிர்ப்பு இயக்கங்களால் கிறிஸ்தவத்திற்கு இருக்கும் எதிர்ப்புகள் மாற ஜெபியுங்கள்.
4. இங்கு, இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொள்பவர்களின் எண்ணிக்கை பெருகவும், அவர்கள் விசுவாசத்தில் உறுதியாக இருந்து, சாட்சியாக வாழ்ந்து ஆத்தும ஆதாயம் செய்பவர்களாய் விளங்க ஜெபியுங்கள்.
5. அபு அலி போன்றோர் நல்ல சீஷனாக மாறவும், இவரைப்போன்று தேவன்மேல் தேடல் உள்ளவர்கள் இயேசுவை சந்திக்க ஜெபிப்போம்.



உங்கள் இருதயங்களைக் கிழித்து, உங்கள் தேவனாகிய கர்த்தர் இடத்தில் திரும்புங்கள். ...சபையை பரிசுத்தப்படுத்துங்கள் - யோவேல் 2:13,16.

# வஹாபிஸம்

வஹாபிஸம் என்பது கி.பி. 18 ஆம் நூற்றாண்டில் அப்துல் வஹாப் என்றும் இஸ்லாமிய அறிஞரால் சவுதி அரேபியாவில் தோற்றுவிக்கப்பட்டது. இந்த இயக்கமானது மது அருந்துதல், புகையிலை, இசை மற்றும் எந்தவித மந்திர காரியங்கள் ஈடுபடுவதை கண்டிப்பாக மறுக்கின்றது. மேலும், தொழுகை போன்ற சம்பிரதாயங்களை கட்டாயமாக ஆண்கள் தனியாகவும், பெண்கள் தனியாகவும் நிறைவேற்றவும் வலியுறுத்துகின்றது.



சவுதி அரேபியாவின் மன்னர் பரம்பரையினால் அங்கீகாரம் பெற்று செயல்படுவதால் உலகமெங்கும் பல மசூதிகள் கட்டவும், பிரச்சாரங்கள், போதனைகள் மூலம் இந்த இயக்கத்தை வலுப்படுத்துவதற்கு தாராளமாக நிதி கிடைக்கின்றது. மேலும், இந்த இயக்கமானது, இதின் கொள்கைகளுக்கு மாறான எதையும் சகிக்காது எதிர்க்கின்றதாய் உள்ளதால் பல இஸ்லாமியர் தீவிரவாத அமைப்புகள் இதிலிருந்து தோன்றுகிறது. மற்ற நாடுகளில் உள்ள தீவிரவாத அமைப்புகளுடனும் தொடர்பு கொண்டுள்ளது.

பீகார் திருச்சபைகள் தேவனுடைய சித்தத்தை அறிந்து இஸ்லாமியர்களுக்காக பாரத்தோடு ஜெபிக்கவும், ஊழியஞ் செய்யவும் தொடர்ந்து ஜெபிப்போம்.

ஆப்பிரிக்க இஸ்லாமியர்கள் தங்கள் சொந்த தேசங்களில் சமாதானமாக வாழும் சூழ்நிலை ஏற்படவும், இவர்களின் இரட்சிப்பிற்காகவும் ஜெபிப்போம்.

...என் ஜனங்கள் தங்களை தாழ்த்தி ஜெபம் பண்ணி, என் முகத்தை தேடி.
தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினால், அவர்கள்
தேசத்திற்கு ஷேமத்தைக் கொடுப்பேன் - 2 நாளாகமம் 7:14.

**நாள் 05**
**ஏப்ரல் 28**

## ஜெபக்குறிப்புகள்:

1. பணத்தாலும், செல்வாக்கினாலும் ஆதிக்கம் செலுத்தி வரும் இந்த வஹாபிய இயக்கம் முற்றிலுமாய் தடுக்கப்பட ஜெபியுங்கள்.
2. இந்த வஹாபிகளால் பாதிக்கப்படும் மற்ற சாதாரண முஸ்லீம்களின் பாதுகாப்பிற்காகவும், முன்னேற்றத்திற்காகவும், இரட்சிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.
3. இந்த வஹாபிகள், மெய்யான சமாதானம் இயேசுவின் மூலமாய் மட்டுமே உண்டாகும் என்று அறிந்து கொள்ள ஜெபியுங்கள்.
4. இவர்கள் மத்தியில் ஊழியம் செய்ய வரமும், அபிஷேகமும் பெற்ற ஊழியர்கள் எழும்ப ஜெபியுங்கள்.
5. இவ்வியக்கத்தின் மூலம் பல மசூதிகள் கட்டவும், மதப்பிரச்சாரம் செய்யவும், மத போதனை செய்யவும் கிடைக்கும் நிதி உதவி நிறுத்தப்பட ஜெபிப்போம்.

காட்டில்வாய்ர், சைப்ரஸ், ஜிபுடி இந்த நாடுகளின் இரட்சிப்பிற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

கோவாவில் வாழும் 60 ஆயிரம் இஸ்லாமியர்களை தேவன் சந்திக்கும்படி ஜெபியுங்கள்.

# தாகஸ்தானிலுள்ள வஹாபியர்கள்



தாகஸ்தான் என்பதற்கு மலைகளின் தேசம் என்று அர்த்தம். இந்த நாடு, ரஷ்ய குடியரசுகளில் ஒன்றானதும் கஸ்பியன் கடல், ஜார்ஜியா, அஸர்பைஜான் போன்றவைகளை எல்லையாகவும் கொண்டு உள்ளது. சுமார் 3 கோடி மக்கள் தொகை கொண்டுள்ள இந்த நாட்டில் 95% முஸ்லீம்களாக உள்ளனர். இவர்கள் "டார்கின்கள்" என்று அழைக்கப்படுகின்றார்கள். சவுதி அரேபியாவில் தொடங்கியதும் தீவிரமான கொள்கைகளை கொண்டு உலகமெங்கும் பரவி இருக்கும் வஹாபிஸம், 1980-களில் இங்கு அறிமுகப்படுத்தப்பட்டது. கி.பி.1990-களின் பிற்பகுதியில் அரசியலிலும் ஆதிக்கம் செலுத்தி பின்பு தனி நாடாக செயல்பட முயற்சித்ததின் விளைவாக பல வருடங்கள் தீவிரமான மோதல்களை சந்தித்தது.

தாகஸ்தானில் வஹாபியர்கள் செல்வாக்கு பெற்று, எவைகளை உண்ண வேண்டும், எப்படி உடுத்த வேண்டும் மற்றும் எவ்வாறு தொழுகை நடத்தப்பட வேண்டும் என்பனவற்றில் எல்லாம் கடுமையான நிபந்தனைகள் விதித்த போதும் ஊழலுக்கு எதிராக ஒன்றிணைந்து செயல்படுவதால் மக்கள் மத்தியில் வரவேற்பும் பெற்றுள்ளனர்.

தமிழ்நாடு உட்பட 6 மாநிலங்களிலுள்ள 30 நகரங்களை குறிவைத்து சீர்குலைக்கவும், பதான்கோட் உட்பட நான்கு விமான தளங்களை தகர்க்கவும், ஐஸ் மற்றும் ஜெய் சிசே முகமது அமைப்பினரின் தாக்குதல் திட்டங்கள் முறியடிக்கப்பட ஜெபிப்போம்.

கடந்த வருடத்தில் வியட்நாமில் தனது விசுவாசத்தின் காரணமாக நூற்றுக்கும் மேற்பட்ட போதகர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். இப்பொழுது சிறையிலிருக்கும் அவர்கள் பாதுகாப்பையும், தேவ பிரசன்னத்தையும் பெற ஜெபியுங்கள்.

... நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது. யாக்கோபு 5:16.





## ஜெபக்குறிப்புகள்:

1. தாகஸ்தான் நாட்டிலுள்ள 95ூ முஸ்லீம்களின் இரட்சிப்பிற்காகவும், வஹாபியர்களின் ஆதிக்கத்திலிருந்து இந்த மக்கள் விடுபடவும் ஜெபியுங்கள்.

2. இங்குள்ள சில நூறு விசுவாசிகளுக்காகவும், இவர்களின் பாஷையில் வேதாகமம் மொழி பெயர்க்கப்படவும் ஜெபியுங்கள்.

3. தாகஸ்தானிலுள்ள அதிகாரிகள் ஊழல் அற்றவர்களாய் இருக்க ஜெபியுங்கள்.

4. "நெறியாளர்கள்" என்று தங்களை கூறிக்கொள்ளும் இந்த தாகஸ்தான் - வஹாபியர்கள், கிறிஸ்து இயேசுவின் மூலம் வருகின்ற பரிசுத்தமும் விடுதலையும் (பிலி.1:9-11) பெற ஜெபியுங்கள்.

எரித்ரியா, லிபியா, மாஸிடோனியா இந்த நாடுகளின் இரட்சிப்பிற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

ஹரியானாவில் வாழும் 13 இலட்சம் இஸ்லாமியர்களை தேவன் சந்திக்கும்படி ஜெபியுங்கள்.

# தப்லீக் ஜமாத் இயக்கம்

தப்லீக் ஜமாத் என்பதற்கு இறை நம்பிக்கையை பரப்புவதற்கான அமைப்பு என்பது பொருள். உலகம் முழுவதும் சுமார் 10 மில்லியன் பேர் இந்த அமைப்பில் உள்ளனர். எத்தியோப்பியா, தெற்கு ஆப்பிரிக்கா, அமெரிக்கா மற்றும் நேபாளம் போன்ற நாடுகளையும் சேர்த்து 150 நாடுகளுக்கு மேல் இந்த அமைப்பு செயல்படுகிறது. இந்தியாவிலுள்ள டெல்லியை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் இந்த அமைப்பு பெயரளவில் முஸ்லீம்களாக இருந்து தொழுகைகளை பின்பற்றாதவர்களை சந்தித்து உற்சாகப்படுத்துவதை, நோக்கமாகக் கொண்டு உள்ளது. இவர்கள் இஸ்லாமியரை தவிர்த்து எவருடனும் பழகுவதோ அல்லது அரசியலில் ஈடுபடுவதோ கிடையாது. எனவே, இவர்களைப்பற்றி கிறிஸ்தவர்கள் அதிகம் அறிந்திருக்க வாய்ப்பில்லை.



இஸ்லாம் எதிர்பார்க்கும் வண்ணம் ஒவ்வொரு முஸ்லீமும் உண்மையாக நடந்து கொண்டால் சமுதாயம் மேம்படும் என்ற நம்பிக்கையை இந்த அமைப்பினர் கொண்டுள்ளனர். வருடத்திற்கு ஒருமுறை வங்க தேசத்தில் நடைபெறும் "இஜ்திமா" என்னும் கூட்டத்தில் சுமார் 50 இலட்சம் மக்கள் கலந்துக் கொள்கின்றனர். இந்த எண்ணிக்கையானது "ஹஜ்" பயணம் செய்பவர்களின் எண்ணிக்கையைவிட மிகவும் அதிகமானது.

பீகார் மற்றும் பைசியிலுள்ள இஸ்லாமிய மக்களை சந்திக்க வேலையாட்களை எழுப்ப ஜெபிப்போம். அநேகம் சபைகள் உண்டாகும்படி ஜெபியுங்கள்.

ஆப்பிரிக்காவில் வசிக்கும் "புலானி" இன இஸ்லாமியர்களின் இரட்சிப்பிற்காக ஜெபிப்போம்.சுவிசேஷத்திற்கு திறந்தவாசல் உண்டாகும்படி ஜெபியுங்கள்.

"நான் தேசத்தை அழிக்காதபடிக்கு திறப்பிலே நிற்கவும், சுவரை அடைக்கவுந்தக்கதாக ஒரு மனுஷனைத் தேடினேன். ஒருவனையும் காணேன்" - எசேக்.22:30

நாள் 07 ஏப்ரல் 30

## ஜெபக்குறிப்புகள்:

1. சங்.36-ன்படி ஜீவ நீரூற்றாகிய இயேசு கிறிஸ்துவை இந்த தப்லீக் ஜமாத் உறுப்பினர்கள் யாவரும் கண்டுக்கொள்ள ஜெபியுங்கள்.
2. வங்கதேசத்தில் ஜனவரி மாதந்தோறும் பெரும் திரள்கூட்டமாய் இவர்கள் கூடுவதினால் ஏற்படும் நடைமுறைச் சிக்கல்கள் அங்குள்ள சாதாரண மக்களை மிகவும் பாதிக்கின்றது. இங்கு வசிக்கும் மக்களின் பாதுகாப்பிற்காகவும், இக்கூட்டத்தின் ஒருங்கிணைப்பாளர்கள் இரட்சிக்கப்படவும் ஜெபியுங்கள்.
3. தங்களுடைய இறை நம்பிக்கையை பரப்புவதில் தீவிரமாக செயல்படும் இந்த இயக்கத்தினர் உண்மை தேவனை அறிந்து கொள்ளவும், இராஜ்ஜியத்தின் பணிகளை செய்திடவும் ஜெபியுங்கள்.
4. இவர்களுக்கு கிறிஸ்தவ விசுவாசத்தை விதைப்பதில் ஈடுபட்டிருக்கும் ஒவ்வொருவரும் பயன்படுத்தப்படவும், பாதுகாக்கப்படவும் ஜெபியுங்கள்.
5. இந்த இயக்கத்தை சந்திக்க பிரத்யேக அழைப்பு, அபிஷேகம் பெற்ற ஊழியர்கள் எழும்பிட ஜெபியுங்கள்.

மாலத்தீவுகள், மலேஷியா, மாலி இந்த நாடுகளின் இரட்சிப்பிற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

ஜம்மு, காஷ்மீரில் வாழும் 70 இலட்சம் இஸ்லாமியர்களை தேவன் சந்திக்கும்படி ஜெபியுங்கள்.

# குர்ஆனிஸ்டுகள் – இயக்கம்

குர்ஆன், சுன்னா மற்றும் ஹதீஸ் ஆகிய மூன்றும் இஸ்லாமிய சட்டத்திற்கு இன்றியமையாததாக உள்ளதாக பெரும்பான்மையான முஸ்லீம்கள் கருதுகின்றனர்.



குர்ஆன் - முகமது நபி அவர்கள் பெற்றுக்கொண்ட வெளிப்பாடு.

சுன்னா - முகமது நபி அவர்களால் பதிவு செய்யப்பட்ட வார்த்தை, ஆவணங்கள் மற்றும் கணிப்புகள்.

ஹதீஸ் - முகமது நபி அவர்களின் வாழ்க்கையைப் பற்றி மற்றவர்கள் சொன்னதாக குறிப்பிடப்பட்டுள்ள புத்தகங்களின் தொகுப்பு.

இவற்றை மனப்பாடம் செய்வதும், விளக்கமாக விவரித்து கூறுவதும் மற்றும் செயல்படுத்துவதும் முஸ்லீம் அறிஞர்களின் வேலையாகும். குர் ஆனிஸ்டுகளை "சமர்ப்பணம் செய்தவர்கள்" என்றும் அழைக்கப்படுகின்றனர். இவர்கள் குர்ஆன் மட்டுமே இஸ்லாம் சட்டத்திற்கும் வழிகாட்டுதலுக்கும் ஏற்புடையது என்று கூறி, "சுன்னா" மற்றும் "ஹதீஸ்"யை நிராகரிக்கின்றனர். குர்ஆனின் வெளிப்பாட்டில் முகமது நபியின் பங்கை மெச்சிக் கொள்ளும் இவர்கள் அதை விளக்குவதாக உள்ள சுன்னா மற்றும் ஹதீஸ் ஏற்புடையதாக கருதுவது இல்லை.

தமிழ்நாட்டில் உள்ள வாணியம்பாடியில் உருது பேசும் பட்டானி இன முஸ்லீம்கள் உள்ளனர். இவர்கள் இரட்சிப்பிற்காக ஜெபியுங்கள்.

டிஷ்ரீன் புரட்சி என்கிற ஈராக் அரசுக்கு எதிராக இங்குள்ள இஸ்லாமியர்கள் நடத்தி வருகின்ற ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள், உள்ளிருப்பு மற்றும் ஒத்துழையாமை போராட்டங்கள் விரைவில் முடிவுபெற ஜெபிப்போம்.

ஒருவரும் இல்லையென்று கண்டு, விண்ணப்பம் பண்ணுகிறவன் இல்லை என்று ஆச்சரியப்பட்டார் - ஏசாயா 59:16.





## ஜெபக்குறிப்புகள்:

1. குர்ஆனிஸ்டுகள் உண்மை அறிய குர்ஆனை ஆய்வு செய்யும்போது இயேசுவை குறித்த வசனங்களினால் ஈர்க்கப்பட்டு அவரை பின்பற்ற ஜெபியுங்கள்.
2. இறைவனுக்கு தங்களை அர்ப்பணம் செய்தவர்கள் என்று தங்களைக் குறித்து எண்ணிக் கொண்டிருப்பவர்கள் மெய்யான தேவனை அறிந்துக் கொள்ளவும், அவருக்கே தங்களை அர்ப்பணம் செய்யவும் ஜெபியுங்கள்.
3. தெளிவான வழிநடத்துதல் மற்றும் வெளிப்பாட்டினை பெற்றிட வாஞ்சையுடன் தேடிக் கொண்டிருக்கும் இஸ்லாமியரை தேவன் ஆசீர்வதித்து தம்மை வெளிப்படுத்த ஜெபியுங்கள்.
4. குர்ஆன் தெளராத் (ஐந்தாகமம்), ஸபூர் (சங்கீதம்), மற்றும் இன்ஜில் (சுவிசேஷங்கள்) ஆகிய வேதங்களில் நேர்வழியும், பேரொளியும் இருக்கிறது என்று கூறும் நிலையில் குர்ஆனிஸ்டுகள் பரிசுத்த வேதாகமத்தை வாசித்து நேர்வழியையும் பேரொளியையும் அறிய ஜெபியுங்கள்.

மொரீஷியஸ், மொராக்கோ, மொஸாம்பிக் இந்த நாடுகளின் இரட்சிப்பிற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

கர்நாடகாவில் வாழும் 65 இலட்சம் இஸ்லாமியர்களை தேவன் சந்திக்கும்படி ஜெபியுங்கள்.

# கானாவிலுள்ள அஹமதியா இயக்கம்

18 ஆம் நூற்றாண்டில் இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில் குலாம் அஹமத் என்பவரால் இந்த இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது. இவர் தன்னை வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியா என்றும் இஸ்லாத்தின் சீர்திருத்தவாதி என்றும் கூறிக்கொண்டார். மேலும் இவர் கிறிஸ்தவம் மற்றும் இந்துத்துவத்தின் கொள்கைகளை மறுப்பதோடல்லாமல் இஸ்லாமும் இயேசு திரும்ப வருவார் என்று கூறுவதையும் எதிர்த்தார். தான் மட்டுமே மனுக்குலத்தின் "தெய்வீக வழிகாட்டி" மற்றும் "தீர்க்கதரிசி" என்று கூறிக்கொண்டார்.



இவரை பின்பற்றும் அஹமதிய இயக்கத்தினர் எதிர்ப்பார்க்கப்பட்ட இயேசுவின் இரண்டாம் வருகையானது இந்த குலாம் அஹமதின் வருகையினால் நிறைவேறிவிட்டதாக நம்புகின்றனர். பாரம்பரிய இஸ்லாமிய கொள்கை தவறு என்று கூறி அவர்களை ஏற்றுக் கொள்வதில்லை. இவர்களின் தற்போதைய தலைவரான மஸ்ரூர் அஹமத் என்பவர் லண்டனை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றார். இவர் கிறிஸ்தவ நம்பிக்கைகளை எதிர்க்கின்ற போதிலும் கிறிஸ்தவ செயல்பாடுகளான மிஷனரி முறைகள், பாரம்பரியங்கள் மற்றும் போதனை முறைகளை பின்பற்றுவதினால் விசுவாசத்தில் குறைவுள்ள கிறிஸ்தவர்களையும் தன்னுடைய வாதிடும் திறமையினால் படித்தவர்களையும் ஈர்த்து விடுகின்றார்.

தமிழ்நாட்டில் இராமநாதபுரத்தில்தான் (16%) அதிகபட்ச முஸ்லீம்கள் வசிக்கின்றனர். இவர்களின் முன்னேற்றம், சமாதானம் மற்றும் இரட்சிப்பு ஆகியவற்றிற்காக ஜெபியுங்கள்.

வேலையின்மை, 16 வருட ஊழல், குறைந்த ஊதியம், மோசமான பொது சேவைகள், ஈரானின் தலையீடு, தேர்தல் சட்ட திருத்தம், புதிய அரசாங்கம் போன்ற குற்றச்சாட்டுகள் மற்றும் கோரிக்கைகளை ஈராக் அரசு செவிக்கொடுத்து நிறைவேற்ற வேண்டும் என ஜெபிப்போம்.

## ஜெபக்குறிப்புகள்:

1. இந்த அஹமதியர்கள் இயேசு கிறிஸ்துவை பற்றிய உண்மையை அறிந்து கொள்ளவும், அவருடைய வல்லமையை அனுபவிக்கவும் ஜெபியுங்கள்.
2. அந்தி கிறிஸ்துவின் ஆவியினால் கட்டப்பட்டிருக்கும் இந்த அஹமதியா இயக்கத்தில் உள்ள இஸ்லாமியர்கள் விடுவிக்கப்பட ஜெபியுங்கள்.
3. இவர்கள் மத்தியில் ஊழியம் செய்யும்படி விசேஷித்த ஆவியையும் கிருபை வரங்களையும் பெற்ற ஊழியர்கள் எழும்பிட ஜெபியுங்கள்.
4. இவ்வியக்கத்தின் தலைவர் மஸ்ரூர் அஹமத் மூலம் பலவீனமான கிறிஸ்தவர்கள் யாரும் முஸ்லீமாக மாறாமல் இருக்கவும், இவ்வாறு இவர் வாதிடும் வேளையில் நல்ல வேத அறிவு கொண்டவர்கள் மூலம் மஸ்ரூர் கண்கள் திறக்கப்படவும் ஜெபியுங்கள்.

நைஜர், ஓமன், பாகிஸ்தான் இந்த நாடுகளின் இரட்சிப்பிற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

மணிப்பூரில் வாழும் 2 இலட்சம் இஸ்லாமியர்களை தேவன் சந்திக்கும்படி ஜெபியுங்கள்.

# தாவூதி போரா

உலகமெங்கும் சுமார் 10 இலட்சத்திற்கும் அதிகமான போரா - முஸ்லீம்கள் வசித்து வருகின்றனர். இவர்கள் இந்தியா, அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளில் உள்ளனர். தாவூதி போராக்கள் என்பது ஷியா பிரிவு முஸ்லீம்கள் மத்தியிலுள்ள ஒரு இயக்கமாகும். முகமது நபிக்கு பின்பாக தோன்றிய "இமாம்" எனப்படும் இஸ்லாமிய குருக்கள் குறிப்பிட்ட காலத்திற்கு பின்பு மறைந்திருப்பதாகவும், "தாய்" என்கின்ற போராக்களின் தலைவரே மறைந்துள்ள இந்த இமாம்களுடன் தொடர்பு கொண்டு இந்த உலக வாழ்க்கைக்கும் அதனை அடுத்த வாழ்விற்கும் ஆசீர்வாதங்களை கொண்டு வருகிறார் என்றும் நம்புகின்றனர்.



இந்த இயக்கத்தைச் சார்ந்த கல்லூரி மாணவரான சபீர் என்பவருக்கு ஒரு குழப்பம் ஏற்பட்டுள்ளது. கல்லூரி தேர்வு நடக்கவிருக்கும் அதே நாளில் அருகிலுள்ள பட்டணம் ஒன்றில் போராக்களின் தலைவர் "தாய்" கலந்துகொண்டு மிகப்பெரிய பண்டிகை நடக்கவிருக்கிறது. பல ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு தலைவரிடம் ஆசீர் பெறுவதைப் போன்று தானும் பண்டிகையில் கலந்து கொள்வதா அல்லது கல்லூரி தேர்வு எழுதுவதா? என்பதே அக்குழப்பம். "இது எனக்கான சோதனை என்று நினைக்கிறேன்" என்று கூறும் சபீர் போன்று பலர் இந்த இயக்கத்தில் உள்ளனர்.

தென் இந்தியாவில் உள்ள சுமார் 10 லட்சம் "லெப்பை" இன முஸ்லீம்களின் பாதுகாப்பு, முன்னேற்றம் மற்றும் இரட்சிப்பிற்காக ஜெபியுங்கள்.

ஈராக்கில் போராட்டங்கள் முடிவு பெறவும், சமாதானமான தீர்வு ஏற்படவும் ஊக்கமாக ஜெபிப்போம். விசுவாசிகளுக்கு தேவ பாதுகாப்பு உண்டாக ஜெபியுங்கள்.

வசனம்: ...கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்கிறான். தட்டுகிறவனுக்கு திறக்கப்படும் - மத்தேயு 7:8.





## ஜெபக்குறிப்புகள்:

1. இந்த போரா இயக்கத்திலுள்ள முஸ்லீம்கள் உலகத்தில் உண்டாகும் மாற்றங்களைப் புரிந்து அவைகளை ஏற்றுக்கொண்டு வாழ ஜெபியுங்கள்.
2. எபி.7:23-26-ல் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்து பேசுகின்ற பிரதான ஆசாரியரான இயேசு கிறிஸ்து மட்டுமே மனிதர்களுக்கும் இறைவனுக்கும் இடையில் மத்தியஸ்தம் பண்ணுகிறவர் என்பதை இந்த போராக்கள் அறிந்து கொண்டு மீட்பைப் பெற ஜெபியுங்கள்.
3. தங்களுடைய சாட்சியுள்ள வாழ்க்கையின் மூலம் இயேசுவை வெளிப்படுத்தும் உண்மை விசுவாசிகள் இந்த போரா சமூகத்துடன் இசைந்து வாழ்ந்து அவர்கள் தேவனை கண்டுகொள்ள உதவும்படி ஜெபியுங்கள்.
4. இவர்கள் மத்தியில் ஊழியம் செய்யும்படி வெளிப்பாடும், வரங்களும் பெற்ற ஊழியர்கள் எழும்பிட ஜெபியுங்கள்.

கத்தார், ரஷ்யா, ருவாண்டா இந்த நாடுகளின் இரட்சிப்பிற்காக ஜெபித்து கொள்ளுங்கள்.

மிஸோரத்தில் வாழும் 12 ஆயிரம் இஸ்லாமியர்களை தேவன் சந்திக்கும்படி ஜெபியுங்கள்.

# சவுதி அரேபிய பெண்கள்

பொதுவாக எந்த ஒரு இஸ்லாமிய நாட்டிலும் பெண்களுக்கு மதிப்போ, கல்வியோ, சமூக உரிமையோ கொடுக்கப்படுவதில்லை என்கின்ற சூழ்நிலை இருக்கும் வேளையில், 2017 ஆம் ஆண்டு, ஜுன் மாதம் சவுதி அரேபியா நாட்டிலுள்ள இஸ்லாமிய பெண்களுக்கு முதன் முறையாக வாகனங்களை ஓட்டிச்செல்ல "உரிமம்" கொடுக்கப்பட்டது. 2019 ஆம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம், 21 வயது நிரம்பிய எந்த ஒரு இஸ்லாமிய பெண்ணும் பாஸ்போர்ட் எடுக்கவும், ஆண் துணை ஏதும் இல்லாமல் வெளிநாடுகளுக்கு செல்லவும் அனுமதி கொடுக்கப்பட்டது.



முகம்மது பின் சல்மான் என்கின்ற சவுதி அரேபிய மன்னரின் சீர்திருத்தத்தினால் முதல் முறையாக இப்படிப்பட்ட அறிவிப்பு வரலாற்றில் இடம் பிடித்துள்ளது. இருப்பினும் மதக்காரியங்கள் போன்ற பலவற்றில் பெண்களுக்கான உரிமை நிலைநாட்டப்பட வேண்டியவைகள் இன்னமும் அதிகமாய் உள்ளது.

மத்திய அரசின் **NRC, CAA** மசோதாக்களினால் எந்த ஒரு இஸ்லாமியரும் பாதிக்கப்படாமல் இருக்க ஜெபியுங்கள்.

மத்திய கிழக்கு ஆசியாவில் ஏற்பட்டுள்ள அபாய நிலை மாறவும், இங்குள்ள இஸ்லாமியருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்படவும் ஜெபியுங்கள்.

நாம் வேண்டிக் கொள்ளுகிறதற்கும், நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே செய்ய வல்லவர் - எபேசியர் 3:20

நாள் 11

மே 4

## ஜெபக்குறிப்புகள்:

1. சவுதி அரேபிய பெண்களின் வாழ்க்கையில் மறுமலர்ச்சி உண்டாக ஜெபியுங்கள். கிறிஸ்துவின் மனதுருக்கம், அவர்களின் இருதயங்களை ஆளுகை செய்ய ஜெபியுங்கள்.
2. சவுதி அரேபிய அரசாங்கம் சொந்த நாட்டு மக்களின் சுதந்திரம், வளர்ச்சி போன்ற காரியங்களில் தொலைநோக்குடன் செயல்பட ஜெபியுங்கள்.
3. உயிர்த்தெழுந்த இயேசுவை முதன்முதலாக சந்தித்தது பெண்களே (லூா.24) சவுதி அரேபிய பெண்கள் அனைவரும் இயேசுவை தரிசிக்க ஜெபியுங்கள்.
4. சவுதி அரேபியாவை தொடர்ந்து மற்ற முஸ்லீம் நாடுகளும் பெண்களுக்கு உரிமையும், முன்னேற்றத்திற்கான திட்டங்களையும் செயல்படுத்த ஜெபியுங்கள்.

சவுதி அரேபியா, எத்தியோப்பியா, ஃபிஜி இந்த நாடுகளின் இரட்சிப்பிற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

ஒடிசாவில் வாழும் 8 இலட்சம் இஸ்லாமியர்களை தேவன் சந்திக்கும்படி ஜெபியுங்கள்.

# பரலோக ஆபரணங்கள்



இது மிகவும் பிரபலமானதும், பெண்களுக்காக எழுதப்பட்டதும் முக்கியமான புத்தகம் ஒன்றின் தலைப்பாகும். 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வெளிவந்த இந்த புத்தகம் வட இந்தியாவிலிருந்து தோன்றியதாகும். மதப்பற்று மற்றும் நல்ல நெறியுடன் வாழ்க்கை நடத்துதலைப் பற்றி அறிந்து கொள்ள முஸ்லீம் பெண்களுக்காக நடைமுறை விளக்கத்துடன் வெளியிடப்பட்ட புத்தகமாகும். இஸ்லாமிய பெண்கள் தங்கள் குடும்பத்தின் மத அடையாளத்தை காப்பதுடன் தங்கள் பிள்ளைகளுக்கு அதை சொல்லிக் கொடுத்து, போதித்து அதன் மூலம் கிறிஸ்தவம் மற்றும் பிற மத கொள்கைகளிலிருந்து தங்களை பாதுகாத்து கொள்ள முடியும் என்று இஸ்லாமிய தலைவர்கள் கருதுவதால் இந்த புத்தகம் பிரபலமானதாக உள்ளது.

உலகமெங்குமுள்ள இஸ்லாமிய பெண்களால் பயன்படுத்தப்படும் இப்புத்தகம் திருமண நிகழ்வின்போது மணப்பெண்ணுக்கு குரானுடன் சேர்த்து வழங்கப்படுகிறது. பல இடங்களில் இளம் பெண்கள் வாரம் இருமுறை சிறு சிறு குழுக்களாக கூடி இப்புத்தகத்தை வாசிப்பதும், அதிலுள்ளவைப் பற்றி கலந்து ஆலோசிப்பதும் வழக்கத்தில் உள்ளது. இப்புத்தகத்தை திரும்பத் திரும்ப படித்தும் வாழ்க்கையில் இதை எப்படி செயல்படுத்துவது என்பதைக் குறித்தும் ஆராய்கிறவர்களாய் இருக்கின்றனர்.

தேசத்தில் உள்ள இஸ்லாமியர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் உட்பட எல்லா சிறுபான்மை மக்களும் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் வாழ பாரத்தோடு ஜெபியுங்கள்.

மத்திய ஆசியாவில் உள்ள சுமார் 70 ஆயிரம் "சிவார்ஸ்" இன இஸ்லாமியரின் இரட்சிப்பிற்காகவும், இவர்கள் மத்தியில் ஊழியர்கள் ஏற்படவும் ஜெபியுங்கள்.

அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான். நான் அவனுக்கு மறு உத்திரவு அருளிச் செய்வேன் - சங்கீதம் 91:15.



## நாள் 12

மே 5

## ஜெபக்குறிப்புகள்:

1. பரலோக ஆபரணங்கள் என்கின்ற இப்புத்தகத்தை ஆர்வமுடன் படித்துவரும் இளம்பெண்கள் "பரலோக இராஜ்ஜியத்தை" விலை உயர்ந்த முத்தை தேடுவது போல தேட ஜெபியுங்கள் (மத்.13:46).
2. இந்த பெண்களுக்கு தேவ வார்த்தையை தேடி படிக்கும் வாய்ப்பு கிடைக்கப்பெற்று, "உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது" என்பதனை அறிந்துக் கொள்ள ஜெபியுங்கள் (சங்.119:105).
3. பரலோக தந்தையால் நேசிக்கப்படுகிறோம். அவர் பார்வையில் விலையேறப்பெற்றவர்களாய் இருக்கிறோம் என்பதை அறிந்தவர்களாய் இஸ்லாமிய பெண்கள் அடுத்த தலைமுறையினரை ஞானம், தைரியம் போன்றவற்றில் வளர்க்க ஜெபியுங்கள்.
4. சிறுசிறு குழுக்களாய் கூடி இந்த புத்தகத்தினை ஆராய்ச்சி செய்யும் பெண்களுக்கு கிறிஸ்தவ பெண்கள் வேத சத்தியங்களையும் கிறிஸ்துவின் அன்பையும் எடுத்துச் சொல்ல ஜெபியுங்கள்.

செர்பியா, காம்பியா, ஜார்ஜியா இந்த நாடுகளின் இரட்சிப்பிற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

சிக்கிமில் வாழும் 15 ஆயிரம் இஸ்லாமியர்களை தேவன் சந்திக்கும்படி ஜெபியுங்கள்.

# இஸ்லாமிய தேசம்

ஆப்பிரிக்க முஸ்லீம் அடிமைகள் மூலமாக இஸ்லாம் அமெரிக்காவிலும் பரவியது. 20ம் நூற்றாண்டு வரை அமைதியாகவும், மறைந்தும் இருந்து வந்த இஸ்லாம் பின்பு இங்கு எழுச்சி பெற்று வளரலாயிற்று. இந்த இஸ்லாமிய தேசம் என்னும் இயக்கமானது மதம் மற்றும் அரசியல் உள்ளடக்கியதாக செயல்படுகிறது. 1930ல் உருவான இவ்வியக்கம் வேகமாக வளர்ந்து, இஸ்லாமியரின் அடிப்படை கொள்கைகள், உறுதியான குடும்ப வாழ்க்கை மற்றும் இஸ்லாமிய பாரம்பரியத்தை கைக்கொள்ளுதல் போன்றவற்றை வலியுறுத்துகிறது.



அமெரிக்க கறுப்பின முஸ்லீம்களின் அடையாளம் மற்றும் அங்கீகாரம் ஆகியவற்றை பேசி அவர்களை ஒன்றிணைத்து தெற்கு பிராந்தியத்தில் தனி நாடு அமைக்கப்படவும் இந்த இயக்கம் முயற்சித்தது. 20 ஆயிரம் முதல் 50 ஆயிரம் வரையிலான உறுப்பினர்களை கொண்ட இவ்வியக்கமானது கொண்டுள்ள தத்துவங்கள், இஸ்லாமிய மற்றும் இஸ்லாம் அல்லாத அமைப்புகளாலும் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. ரம்ஸான் நோன்பை வழக்கமாக கடைபிடிக்கும் ரமலான் மாதத்திலிருந்து வசதிக்காக டிசம்பர் மாதத்தில் வைத்துக் கொள்ள இவ்வியக்கம் அனுமதி அளிக்கிறது. இது போன்ற கருத்துக்களால் இந்த இயக்கம் முரண்படுகிறது.

மதத்தின் அடிப்படையில் குடியுரிமை வழங்கப்படாமலிருக்கவும், இந்து - முஸ்லீம் பிரிவினைவாதத்தை இந்த சட்டங்கள் ஏற்படுத்தாமல் இருக்கவும் ஜெபியுங்கள்.

ரஷ்ய குடியரசு நாடுகளில் ஒன்றான "செச்சினியா"வில் வாழும் "செச்சேன்" இன இஸ்லாமியரின் இரட்சிப்பிற்காக ஜெபியுங்கள்.

கினியா பிஸ்ஸௌ, ஜிப்ரால்டர், கினியா இந்த நாடுகளின் இரட்சிப்பிற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

திரிபுராவில் வாழும் 25 ஆயிரம் இஸ்லாமியர்களை தேவன் சந்திக்கும்படி ஜெபியுங்கள்.

எனக்காக உபவாசம் பண்ணுங்கள். நானும் என் தாதிமாரும் உபவாசம் பண்ணுவோம் - எஸ்தர் 4:16

## நாள் 13 மே 6

## ஜெபக்குறிப்புகள்:

1. அமெரிக்காவில் வாழும் முஸ்லீம்களில் 5 பேர்களில் ஒருவர் கறுப்பு இனத்தை சார்ந்தவர்கள். இவர்கள் இயேசுவை தரிசிக்கவும், இவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயரவும் ஜெபியுங்கள்.
2. இனவெறிக்கு எதிராக நியாயம் கிடைக்கும்படி போராடும் அமைப்புகள் மற்றும் தனி நபர்களுக்கு ஞானம், வலிமை மற்றும் பாதுகாப்பு உண்டாக ஜெபியுங்கள்.
3. அமெரிக்க தேசத்தில் பெருகி வரும் இஸ்லாமின் வளர்ச்சி கட்டுப்படுத்தப்பட ஜெபியுங்கள்.
4. அமெரிக்க கிறிஸ்தவர்கள் தேவனை உண்மையாக ஆராதிக்கிறவர்களாகவும், மற்ற மக்களை ஆசீர்வதிக்கிறவர்களாகவும் திகழ ஜெபியுங்கள்.
5. இந்த இஸ்லாமிய தேசம் என்கின்ற இயக்கத்தின் மத்தியில் ஊழியம் செய்யும் வாஞ்சையும், தரிசனமும் பெற்ற ஊழியர்கள் எழும்பிட ஜெபியுங்கள்.

# உத்தரபிரதேசத்திலுள்ள சன்னி முஸ்லீம்கள்

இந்திய முஸ்லீம்களின் எண்ணிக்கை 18 கோடியை தாண்டிய போதிலும் இந்தியாவின் மொத்த மக்கள் தொகையாகிய 130 கோடியை வெறும் 15% மட்டுமே பெற்று சிறுபான்மையினராகவே உள்ளனர். இந்த 18 கோடியில் 85% சன்னி முஸ்லீம்களாகவும், அதில் 4 கோடி பேர் உத்திரப்பிரதேசத்திலும் உள்ளனர். சில நூற்றாண்டுகளாக இந்தியாவில் மிஷனரி பணிகள் நடந்த வண்ணமிருந்தும் வட இந்தியாவில் உள்ள முஸ்லீம்கள் குறிப்பாக உ.பி.யிலுள்ள சன்னி முஸ்லீம்கள் சிறிதளவும் சந்திக்கப்படாதவர்களாகவே உள்ளனர்.



2002-ல் குஜராத்தில் நடைபெற்ற கலவரத்தின்போது ஆயிரக்கணக்கான முஸ்லீம்கள், இந்து போராளிகளால் கொலை செய்யப்பட்டதினால் வட இந்திய முஸ்லீம்கள் பயத்துடனே வாழ்ந்து வருகின்றனர். இதன் விளைவு, இவர்கள் இன்னும் தங்கள் இயக்கங்களை வலுப்படுத்துவதிலும், ஒவ்வொரு இஸ்லாமிய அமைப்புகளிலும் பாதுகாத்தும் வருகின்றனர்.

தொலைக்காட்சி, பத்திரிகை போன்ற எல்லாவிதமான ஊடகங்களிலும் முஸ்லீம்களைக் குறித்து தவறான செய்திகளே வெளியிடப்படுவதினால் இஸ்லாமிய சகோதரருக்கு தண்ணீர், மருத்துவம், சுகாதாரம், கல்வி மற்றும் வேலை வாய்ப்புகள் போன்றவைகள் தடுக்கவோ அல்லது மறுக்கவோ படுகின்றது.

உ.பி. முஸ்லீம்கள் இது போன்ற பிரச்சனைகளை சந்தித்துக் கொண்டிருந்தாலும் தாராள மனப்பான்மை உள்ளவர்களாகவும், தங்கள் வீட்டிற்கு வரும் எவரையும் ஏற்றுக்கொண்டு உபசரிக்கும் அன்பு உள்ளம் படைத்தவர்களாகவும் இருக்கின்றனர்.

இஸ்லாமிய வாலிபர்கள் தேசப்பற்றுள்ளவர்களாய் வளர்ந்திடவும், இயேசு கிறிஸ்துவில் உள்ள நம்பிக்கையும், சமாதானத்தை பெற்றிடவும் ஜெபியுங்கள்.

ஈரானில் உள்ள அமெரிக்க தூதரகத்தை "ஹிஸ்புல்லா" என்கின்ற இஸ்லாமிய அமைப்பை சார்ந்தவர்கள் தாக்கியுள்ளனர். இதுபோன்ற தீவிரவாத செயல்கள் அற்றுப்போக ஜெபியுங்கள்.

எருசலேமே, உன் மதில்கள் மேல் பகல் முழுவதும் இரா முழுவதும் ஒருக்காலும் மவுனமாயிராத ஜாமக்காரரைக் கட்டளையிடுகிறேன் - ஏசாயா 62:6.



நாள் 14

மே 7

## ஜெபக்குறிப்புகள்:

1. மதம் மற்றும் கலாச்சாரம் வேறுபட்டிருந்தாலும் இந்திய மக்கள் ஒற்றுமையுடன் வாழ்ந்து நாட்டின் இறையாண்மையினை காத்திட ஜெபியுங்கள்.
2. சிறுபான்மையினரை நசுக்குவதால் பெரும்பான்மையினரின் ஆதரவை பெறவிரும்பும் அரசியல் தலைவர்கள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.
3. உ.பி.யிலுள்ள முஸ்லீம்கள் அச்சுறுத்தலில் வாழும் இந்த காலத்தில் கிறிஸ்தவர்கள் ஆதரவு அளிப்பவர்களாக செயல்பட ஜெபியுங்கள்.
4. வட இந்தியாவில் உள்ள கிறிஸ்தவர்கள் இருளிலுள்ள இச்சமூகங்களுக்கு இயேசு கிறிஸ்துவின் வெளிச்சம், நம்பிக்கை, சமாதானம் போன்றவைகளை வெளிப்படுத்த ஜெபியுங்கள்.

இந்தியா, இந்தோனேஷியா, ஈரான் இந்த நாடுகளின் இரட்சிப்பிற்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்.

மேற்கு வங்காளத்தில் வாழும் 2 கோடியே 50 இலட்சம் இஸ்லாமியர்களை தேவன் சந்திக்கும்படி ஜெபியுங்கள்.

# முஸ்லீம் சகோதரத்துவம்

நவீன இஸ்லாமிய இயக்கங்களில் மிகவும் செல்வாக்குப் பெற்ற இயக்கமாக இந்த முஸ்லீம் சகோதரத்துவம் என்கின்ற இயக்கம் உள்ளது. ஒரு எகிப்திய பள்ளி ஆசிரியரால் 1928 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டஇந்த இயக்கம், தனிநபருக்கும் முழு சமூகத்தின் முன்னேற்றத்திற்கான நலப்பணிகளை எல்லா இடங்களிலும் நிறைவேற்றுவதில் இஸ்லாம் தீவிரம் காட்டுவதை வலியுறுத்துகின்றது. இந்த இயக்கம், அரேபிய நாடுகளில் வேகமாக பரவி இஸ்லாமிய சட்டத்தின் அடிப்படையிலேயே எல்லா இஸ்லாமிய நாடுகளும் செயல்படுவதை ஊக்குவிக்கிறது. இந்த அமைப்பின் தீவிர செயல்பாடுகளினாலும், அச்சுறுத்தலினாலும் அநேகர் பயந்து ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் அடைந்துள்ளனர்.



இந்த இயக்கத்திலுள்ள பெரியவர்கள் பாரம்பரிய தத்துவங்களையும், இளைஞர்கள் புதிய நடைமுறை செயல்திட்டங்களையும் விரும்புகிறவர்களாக இருப்பதினால் எகிப்து மற்றும் சில அரேபிய நாடுகளில் இந்த அமைப்பானது பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. இந்த அமைப்பானது சமாதானம் மற்றும் ஜனநாயகம் போன்றவற்றின் அடிப்படையில் செயல்படுவதாக கூறிக்கொண்டாலும் ரஷ்யா, சில அரேபிய நாடுகள் மற்றும் மனித உரிமை அமைப்புகள் இந்த அமைப்பானது வன்முறை மற்றும் தீவிரவாதத்தை ஊக்குவிக்கும் அமைப்பாக செயல்படுவதாகக் கருதுகின்றனர்.

இஸ்லாமிய சிறுவர்கள் சிறுவயதிலேயே இயேசுவை அறிந்து கொள்ளும்போது, பெரியவர்கள் ஆன பின்பும் நம்பிக்கையை விடுவதில்லை. எனவே, சிறு வயதிலேயே இயேசுவை அறிந்திடும் வாய்ப்பினை பெற்றிட ஜெபியுங்கள்.

ஈராக்கில் உள்ள பாக்தாத்தில் ஆளில்லா விமானங்களை கொண்டு அமெரிக்க படை தாக்குதல் நடத்தியுள்ளனர். இஸ்லாமிய மக்களும் தேசங்களும் பாதுகாக்கப்பட ஜெபியுங்கள்.

ஆ, என் தலை தண்ணீரும், என் கண்கள் கண்ணீரூற்றுமானால் நலமாயிருக்கும்.
...நான் இரவும் பகலும் அழுவேன் - எரேமியா 9:1



## ஜெபக்குறிப்புகள்:

1. முஸ்லீம் சகோதரத்துவம் என்கின்ற இந்த அமைப்பிலுள்ள தலைவர்களும் உறுப்பினர்களும் இரட்சிக்கப்படவும், உண்மையான சகோதரத்துவத்தை செயலில் காட்டவும் ஜெபியுங்கள்.
2. இந்த அமைப்பானது அரேபிய நாடுகளில் கொண்டிருக்கும் செல்வாக்கினை சமூகத்தின் சமாதானம், விடுதலை மற்றும் முன்னேற்றம் ஆகியவற்றிற்காக பயன்படுத்த ஜெபியுங்கள்.
3. வன்முறை, தீவிரவாதம் போன்றவற்றை ஊக்குவிக்கும் இந்த இயக்கம் தடை செய்யப்படவும், அதிலுள்ளவர்கள் மனம் திரும்பவும் ஜெபியுங்கள்.
4. இவர்கள் மத்தியில் ஊழியம் செய்ய அழைப்பும், கிருபையும் பெற்றவர்கள் எழும்பிட ஜெபியுங்கள்.

இஸ்ரேல், யோர்தான், கஸகஸ்தான் இந்த நாடுகளின் இரட்சிப்பிற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

சண்டிகரில் வாழும் 91 ஆயிரம் இஸ்லாமியர்களை தேவன் சந்திக்கும்படி ஜெபியுங்கள்.

# தியோபந்த் - மதரஸா இயக்கம்

மதரஸா என்பது முஸ்லீம் மசூதிகளின் தலைவர்கள் ஆவதற்கோ அல்லது இஸ்லாமைப் பற்றி நன்கு கற்று அறிந்து கொள்வதற்கோ சென்று படிக்கும் இடமாகும். இந்த இயக்கமானது உலகெங்கும் இஸ்லாமிய மத தலைவர்களை உருவாக்குகின்றது.



கி.பி. 1866 ஆம் ஆண்டு உத்திரப்பிரதேசத்திலுள்ள "தியோபந்த்" என்னுமிடத்தில் தான் முதல் மதரஸா உருவானது. இங்கு உலகெங்கும் இருந்து வரும் 1500 மாணவர்கள் ஒவ்வொரு ஆண்டும் சேர்க்கப்படுகின்றனர். இங்கு படிக்கும் காலமானது 5 ஆண்டுகள் முதல் 8 ஆண்டுகள் வரை இருக்கும். இஸ்லாமிய கலாச்சாரத்தை செயல்படுத்துவதும், பாதுகாப்பதுமே இந்த மதரஸாக்களின் நோக்கமாகும். இதை நிறைவேற்றுவதற்காக இதில் படித்து முடித்த ஒவ்வொரு மாணவனும் ஒரு மசூதியையோ அல்லது ஒரு மதரஸாவையோ உலகின் எந்த பகுதியிலாவது தொடங்கும்படி ஊக்குவிக்கப்படுகின்றனர். தற்சமயம் சுமார் 1 லட்சம் மதரஸாக்கள் உலகமெங்கும் செயல்படுவதாக கூறப்படுகின்றது. இந்த மதரஸாக்களின் தேவைகள் உள்ளூர் மக்களால் சந்திக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் உள்ள 80 சதவீதம் தமிழ் முஸ்லீம்கள் மற்றும் 20 சதவீதம் உருது பேசும் முஸ்லீம்கள் உள்ளனர். இவர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட ஜெபியுங்கள்.

வளைகுடா நாடுகளில் நடக்கும் யுத்தங்களினால், தங்கம் மற்றும் கச்சா எண்ணெயின் விலை உயர்ந்துகொண்டே உள்ளது. இந்நிலை மாற ஜெபியுங்கள்.

... அழுதுகொண்டு விண்ணப்பம் செய்யும் சத்தம் உயர்ந்த ஸ்தானங்களிலே கேட்கப்படும் - எரேமியா 3:21.





## ஜெபக்குறிப்புகள்:

1. இந்த இளம் இஸ்லாமிய தலைவர்களை இயேசுவின் நாமத்தினால் ஆசீர்வதித்து அவர்கள் முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தை தேடும்படி ஜெபியுங்கள்.
2. தியோபந்த் மதரஸா இயக்கத்தின் தலைவர்கள், ஆசிரியர்கள் சத்தியத்தை அறியவும், இரட்சிக்கப்படவும் ஜெபியுங்கள்.
3. உலகமெங்கும் செயல்படும் ஒவ்வொரு மதரஸாக்களுக்காகவும் அதிலுள்ள ஆசிரியர்கள், மாணவர்கள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.
4. பள்ளி சென்று படிக்கும் வயதிற்கு முன்பாகவே மதரஸாவில் சேர்ந்து மார்க்க போதனை என்ற பெயரில் வைராக்கியத்தை விதைக்கும் பரிதாபம் நீங்க ஜெபியுங்கள்.

கிர்கிஸ்தான், குவைத், லெபனான் இந்த நாடுகளின் இரட்சிப்பிற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

தாத்ராவில் வாழும் 23 ஆயிரம் இஸ்லாமியர்களை தேவன் சந்திக்கும்படி ஜெபியுங்கள்.

# முற்போக்குவாத முஸ்லீம்கள்

தற்காலத்திற்கேற்ப தங்களை மாற்றிக்கொள்ள விரும்பும் முற்போக்கு சிந்தனையுள்ள முஸ்லீம்கள், 7 ஆம் நூற்றாண்டில் அரேபிய கலாச்சாரத்தின் அடிப்படையில் தோற்றுவிக்கப்பட்ட இஸ்லாமை இன்றைய சூழ்நிலைக்கேற்ப மாற்றப்பட விரும்புகின்றவர்களாக உள்ளனர். இவர்கள், இஸ்லாமிய நம்பிக்கையை கைவிடாது ஆனால் நவீனமாக செயல்பட விரும்புவதினால் பல எதிர்ப்புகளை சந்திக்க வேண்டியவர்களாக உள்ளனர். இவர்கள் பெண்களுக்கு மதிப்பளித்து நடத்துவது, மனித உரிமை நலனில் அக்கறை காட்டுவது மற்றும் முஸ்லீம்களுக்கு மட்டும் என்று தனியாக செயல்படாது அனைத்து மக்களுக்குமான பொது நிறுவனங்களை நடத்துவது போன்ற காரியங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.



பாரம்பரியத்தில் உறுதியாக இருந்து, மற்ற மக்களுடன் கலவாமல் தனியாக செயல்பட விரும்பும் முஸ்லீம்களால் இந்த நவீன முற்போக்கு சிந்தனை உள்ள முஸ்லீம்கள் மிகவும் எதிர்க்கப்படுகின்றனர். இதற்குப் பயந்து பலர் இரகசியமாக அல்லது வலைதளங்களில் (ஆன்லைன்) தங்களுடைய நம்பிக்கையை பகிர்ந்து கொள்கின்றனர்.

இந்திய முஸ்லீம் மக்கள் தொகையில் 40 சதவீதம் பேர் உத்திரப்பிரதேச மாநிலத்தில் வசிக்கின்றனர். இவர்களுக்கு இயேசு தேவை. ஜெபியுங்கள்.

சுமார் 5,780,000 (5 கோடியே, 7 இலட்சத்து, 80,000 பேர்) மக்கள் தொகை கொண்ட ஐக்கிய அரபு அமீரகம் இயேசுவை இரட்சகராக அறிந்திட ஜெபியுங்கள்.

என்னை நோக்கிக்கூப்பிடு. அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன் - எரேமியா 33:3



## ஜெபக்குறிப்புகள்:

1. கேளுங்கள் கொடுக்கப்படும், தேடுங்கள் கண்டடைவீர்கள் என்ற வசனத்தின்படி, மாறிவரும் உலகில் பல கேள்விகளுடன் காணப்படும் இந்த முற்போக்குவாதிகளுக்கு இயேசுவே பதில் என்று புரியும்படி ஜெபியுங்கள்.
2. பல்வேறு நாடுகளில் வேலைக்காக இடம் பெயர்ந்த முஸ்லீம்கள் அங்குள்ள கிறிஸ்தவர்களால் இயேசுவை அறிந்து கொள்ளும் வாய்ப்பினை பெற்றிட ஜெபியுங்கள்.
3. இந்த முற்போக்கு சிந்தனைக் கொண்ட சில முஸ்லீம்கள் இயேசு ஒருவரே மாறாதவரும், சமாதானக் காரணரும் என்று உணர்ந்து ஏற்றுக்கொள்ள ஜெபியுங்கள்.

செனகல், சிவராலியோன், சிங்கப்பூர் இந்த நாடுகளின் இரட்சிப்பிற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

அருணாச்சலப்பிரதேசத்தில் வாழும் சுமார் 20 இலட்சம் இஸ்லாமியர்களை தேவன் சந்திக்கும்படி ஜெபியுங்கள்.

# இஸ்லாமிய புரட்சி – ஈரான்

1979 ஆம் ஆண்டு, ஈரானுக்கும், இஸ்லாமிய உலகிற்கும் ஒரு குறிப்பிட்டத்தக்க மாற்றத்தை ஏற்படுத்திய ஆண்டு ஆகும். அரசியல் மற்றும் மதக் காரியங்களில் நிறைந்திருந்த மேற்கத்திய முறைகளுக்கு எதிராகவே இந்த புரட்சி வெடித்தது. பெர்சிய அரசு முறைக்கு முடிவு கட்டப்பட்டு, அதற்க பதிலாக "இஸ்லாமிய குடியரசு" ஏற்படுத்தப்பட்டது. பிரான்சுக்கு நாடு கடத்தப்பட்ட அயத்துல்லாஹ் கொமேனி என்பவர் ஈரானுக்கு திரும்ப வந்து புரட்சியை தலைமை ஏற்று இஸ்லாமிய அரசை நிறுவினார்.



மேற்கத்திய முறைகள் நீக்கப்பட்டு இஸ்லாமிய பாரம்பரிய கொள்கைகள் நிலைநிறுத்தப்பட்டது. இது அண்டை நாடுகளான எகிப்து மற்ற அரேபிய நாடுகளுக்கும் பரவி மக்களின் அன்றாட வாழ்வில் பெரும் தாக்கத்தை உண்டாக்கியது. மிகுதியான அடக்குமுறைகளும், கட்டுப்பாடுகளும் பொதுமக்களை வளர்ச்சிப்பாதையில் நடத்தவில்லை. பொருளாதார மந்தம், போதை வஸ்துகளின் பெருக்கமும் இஸ்லாமிய தலைவர்களின்மீது மக்களுக்கு சலிப்பை ஏற்படுத்தியுள்ளது. அதே நேரத்தில், இந்த சூழ்நிலையில் கிறிஸ்தவ ஊடகங்களும் இயற்கைக்கு அப்பாற்பட்ட தேவனின் வெளிப்பாடுகளும் பல ஈரானிய மக்களை இயேசுவிடம் வழி நடத்துகிறது.

சுமார் 2.5 கோடி பீஹாரி முஸ்லீம்கள் இரட்சிப்பிற்காக ஜெபியுங்கள். அங்குள்ள விசுவாசிகள் தொடர்ந்து இரட்சிப்பிற்காக மன்றாடும்படி ஜெபியுங்கள்.

வட ஆப்பிரிக்க நாடான "மொரோகோ"வில் இஸ்லாமே ஆதிக்க மதமாக உள்ளது. இங்குள்ள பெரும்பான்மையினராக இஸ்லாமியர் இயேசுவை அறிந்து கொள்ளும் வாய்ப்பினை பெற்றிட ஜெபியுங்கள்.

இலங்கை, சூடான், சுரிநாம் இந்த நாடுகளின் இரட்சிப்பிற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

பீகாரில் வாழும் 2 கோடி இஸ்லாமியர்களை தேவன் சந்திக்கும்படி ஜெபியுங்கள்.

...அவர்கள் கூப்பிடுகிறதற்கு முன்னே நான் மறு உத்தரவு கொடுப்பேன். அவர்கள் பேசும்போதே நான் கேட்பேன் - ஏசாயா 65:23.



நாள் 18 மே 11

## ஜெபக்குறிப்புகள்:

1. சமாதானம், நிலையான அரசியலமைப்பு மற்றும் விடுதலை பெறும்படியான உண்மையான புரட்சியை நோக்கி ஈரானிய மக்களும், தலைவர்களும் பயணித்திட ஜெபியுங்கள்.
2. பொருளாதார வீழ்ச்சியும் மோசமான சமுதாய சூழ்நிலையிலும் சிக்கித் தவிக்கும் ஈரானிய மக்களின் முன்னேற்றத்திற்காகவும் இரட்சிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.
3. ஈரானியர்களை சந்திக்கும் பாரமும் அபிஷேகமும் கொண்ட ஊழியர்கள் ஏற்பட ஜெபியுங்கள்.
4. வேலை வாய்ப்புகளுக்காக பிற நாடுகளில் தங்கியிருக்கும் ஈரானியர்கள் அங்குள்ள கிறிஸ்தவர்களால் சத்தியத்திற்கு நேராக வழி நடத்தப்பட ஜெபியுங்கள்.
5. ஈரானில் உண்டாயிருக்கும் கிறிஸ்தவ இயக்கமானது பெருகி வளரவும், மற்ற இஸ்லாமிய நாடுகளுக்கும் பரவவும் ஜெபியுங்கள்.

# ஈரானிலுள்ள வீட்டு சபை – இயக்கம்

1979 இல் ஏற்பட்ட இஸ்லாமிய புரட்சியானது ஈரானில் கிறிஸ்தவத்திற்கு மிகப்பெரிய தடையாக அமைந்தது. ஈரானிய முஸ்லீம் மக்களுக்கு சுவிசேஷத்தை மிகவும் இரகசியமாக மட்டுமே அறிவிக்க முடியும் என்பதை உணர்ந்த கிறிஸ்தவ தலைவர்கள் வீடுகளில் தனியாகவும், இரகசியமாகவும் மக்களை சந்தித்து சுவிசேஷத்தை அறிவித்து வந்தனர். 1990-களின் இறுதியில் இந்த சந்திப்பானது வீட்டு சபை இயக்கமாக உருவானது. இதில் பலர் பங்குபெற்றனர். சிறு துளி பெரு வெள்ளம் போன்று இந்த வீட்டு சபை இயக்கம் ஒவ்வொரு வாரமும் நடைபெற்று வருவதைப் போல சுவிசேஷமும் பரவி வருகிறது.



ஒரு வீட்டு சபை இயக்கமானது ஈரானிய அரசாங்கத்தால் கண்டுபிடிக்கப்பட்டதனால் அது கடுமையாக நடத்தப்படுகின்றது. புதிய விசுவாசிகள் ஒன்றாகக் கூடி தங்கள் இரட்சகரை பற்றி அதிகமாக அறிந்து கொள்வதில் மிகவும் ஆர்வமாக உள்ளனர். கிறிஸ்துவின் நிமித்தம் பாடுகளை மகிழ்ச்சியுடன் அனுபவித்து வரும் விசுவாசிகளை காணும் மற்ற மக்களுக்கு ஏற்படும் ஆச்சரியத்தினால் இயேசுவைப் பற்றி அறிந்து கொள்ளும் ஆர்வம் அதிகரித்து வருகிறது.

சுமார் 18 லட்சம் இஸ்லாமியர்கள் ஹைதராபாத்தில் வசிக்கின்றனர். இங்கு அடிக்கடி இந்து - முஸ்லீம் கலவரம் ஏற்படுகின்றது. இந்நிலை மாறவும் இங்குள்ள இஸ்லாமியர்கள் சந்திக்கப்படவும் ஜெபியுங்கள்.

இலங்கையில் சுமார் 2 கோடி இஸ்லாமியர்கள் உள்ளனர். சிறுபான்மையினராக உள்ள இவர்கள், புத்த சமய சிங்களர்களால் தற்சமயம் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். இவர்கள் பாதுகாப்பிற்காகவும்,

ஜெபத்தைக் கேட்கிறவரே, மாம்சமான யாவரும் உம்மிடத்தில் வருவார்கள் - சங்கீதம் 65:2.

**நாள் 19**
**மே 12**

## ஜெபக்குறிப்புகள்:

1. ஈரானிலுள்ள வீட்டு சபைகளின் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சிக்காகவும், புதிய விசுவாசிகளின் விசுவாசமும், வாழ்க்கைத் தரமும் உயர்ந்திட ஜெபியுங்கள்.
2. தேவனை விடுதலையோடு ஆராதிக்கும் சூழல் இங்குள்ள விசுவாசிகளுக்கு உண்டாகிட ஜெபியுங்கள்.
3. ஈரானின் சமாதானத்திற்காகவும், வளர்ச்சிக்காகவும் நிலையான அரசியல் அமைப்பு அமையவும் ஜெபியுங்கள்.
4. ஈரானிய தலைவர்களை தேவன் சந்திக்கும்படியும் அவர்கள் இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொள்ளும்படியும் ஜெபியுங்கள்.
5. இங்குள்ள கிறிஸ்தவர்கள் ஈரானிய மக்களுக்கு "உப்பாகவும் வெளிச்சமாகவும்" இருந்து தேசத்தை கிறிஸ்துவை அறிகிற அறிவினால் நிரப்ப ஜெபியுங்கள்.

தஜிகிஸ்தான், தான்சானியா, தாய்லாந்து, இந்த நாடுகளின் இரட்சிப்பிற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

மத்தியப்பிரதேசத்தில் வாழும் 39 இலட்சம் இஸ்லாமியர்களை தேவன் சந்திக்கும்படி ஜெபியுங்கள்.

# தைவானிலுள்ள இந்தோனேசிய முஸ்லீம்கள்



தைவானில் சுமார் 3,50,000 முஸ்லீம்கள் உள்ளனர். இவர்களில் பெரும்பான்மையினர் வேலைக்காக இந்தோனேசியாவிலிருந்து தைவான் வந்தவர்கள். இவர்கள் கூலி வேலை செய்பவர்களாகவும், வீட்டு வேலை செய்பவர்களாகவும், நர்ஸாகவும், மற்றும் மீன் பிடிப்பவர்களாகவும் வேலை செய்கின்றனர். மேலும் சிலர் மாணவர்கள் ஆகவும், சிலர் தைவான் பிரஜைகளை திருமணம் செய்தவர்களாகவும் உள்ளனர். தைவானில் வேலை செய்யும் முஸ்லீம்கள் அங்குள்ள எஜமான்களால் மதிப்பளிக்கப்பட்டு, இஸ்லாமிய சடங்குகளான தொழுகை, நோன்பு மற்றும் பண்டிகைகள் போன்றவைகளை அனுசரிக்க அனுமதிக்கப்படுகின்றனர்.

சொந்த நாட்டைப் பிரிந்து அந்நியர்களாய் வருத்தத்துடன் வாடும் இந்த இந்தோனேசியர்கள் வார இறுதிநாளான ஞாயிறன்று தைவானின் தலைநகரான "தைபே"யில் ஒன்று கூடுகின்றனர். அப்போது உறவினர்கள் மற்றும் தெரிந்தவர்களிடம் மகிழ்ச்சியோடு தாய் மொழியில் பேசுவதிலும், சொந்த நாட்டு உணவுகளை பரிமாறிக் கொள்வதிலும் தங்கள் வேலை பளுவை மறந்தவர்களாய் தங்களை தாங்களே உற்சாகப்படுத்திக் கொள்கின்றனர். இவர்கள் தங்களுடைய மூன்று வருட ஒப்பந்த வேலை முடிந்தவுடன் ஊர் திரும்பவோ அல்லது மீண்டுமாக அடுத்த மூன்று வருடங்களுக்கான வேலையை தொடரவோ செய்கின்றனர். இந்தோனேசியாவின் பல கிராமங்கள் இன்னமும் இயேசுவைப் பற்றி ஒருமுறை கூட கேள்விப்பட்டதில்லை. இவர்களுக்கு இயேசுவை அறிந்திட கிடைக்கும் ஒரே வாய்ப்பு வெளிநாட்டில் தங்கி வேலை செய்வதே ஆகும்.

## ஜெபக்குறிப்புகள்:



1. தைவானில் தங்கி வேலை செய்யும் இந்தோனேசிய முஸ்லீம்கள் ஆசீர்வதிக்கப்படவும், அவர்கள் வாழ்க்கைத் தரம் உயரவும் ஜெபியுங்கள்.
2. தைவானிலுள்ள கிறிஸ்தவர்கள் தேவ அன்பினால் நிரப்பப்பட்டு அங்குள்ள முஸ்லீம்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க ஜெபியுங்கள்.
3. இவர்கள் மத்தியில் ஊழியம் செய்யும்படி பிரத்யேக அபிஷேகம் பெற்ற ஊழியர்கள் எழும்பிட ஜெபியுங்கள்.
4. தைவானை தன் ஆளுகையில் வைத்திருக்கும் பொல்லாத ஆவிகள் அந்த தேசத்தை விட்டு வெளியேறும்படி பாரத்தோடு நாவின் அதிகாரத்தை பயன்படுத்தி ஜெபியுங்கள்.
5. இந்தோனேசியாவின் ஜெப எழுப்புதல் முழு உலகத்தையும் பற்றிப் பிடிக்கும்படி ஜெபியுங்கள்.

குஜராத்தில் சுமார் 50 இலட்சம் முஸ்லீம்கள் உள்ளனர். இஸ்லாம் தோன்றிய 6 ஆம் நூற்றாண்டிற்கு முன்பிருந்தே இங்கு வியாபாரம் செய்து வந்த அரேபியர்கள் பின்பு முஸ்லீம்களான பின்பும் முதலாவது குஜராத்திலேயே வியாபாரம் செய்துள்ளனர். இங்குள்ள முஸ்லீம்களின் பாதுகாப்பு, இரட்சிப்பு ஆகியவற்றிற்காக ஜெபியுங்கள்.

மத்திய ஆசியாவில் உள்ள தஜிகிஸ்தான் நாடானது 95 சதவீதம் இஸ்லாமியரைக் கொண்ட நாடாகும். இவர்கள் இயேசுவை அறிந்திடும் வாய்ப்பினை பெற்றிட ஜெபியுங்கள். அந்தகார வல்லமைகள் விலகும்படி ஜெபியுங்கள்.

துனிஷியா, துருக்கி, துர்க்மினிஸ்தான் இந்த நாடுகளின் இரட்சிப்பிற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

டெல்லியில் வாழும் 13 இலட்சம் இஸ்லாமியர்களை தேவன் சந்திக்கும்படி ஜெபியுங்கள்.

...பரலோகத்திருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயமல்லவா? மத்.7:11.

# காஷ்மீரி முஸ்லீம்கள்



காஷ்மீரானது இஸ்லாமியர்கள் அதிகம் வசிக்கும் பாகிஸ்தானை வடக்கு எல்லையாகவும், இந்துக்கள் அதிகம் வசிக்கும் இந்தியாவை தெற்கு எல்லையாகவும், பௌத்தர்கள் அதிகம் வசிக்கும் திபெத்தை கிழக்கு எல்லையாகவும் அமையப்பெற்று புவியியல் ரீதியாக ஒரு சுவாரஸ்யமான இடத்தில் அமைந்துள்ளது. இந்த மூன்று மதங்களின் தாக்கமும் காஷ்மீரில் உண்டு. இன்றளவும் இந்துக்களின் புனித இடங்களில் ஒன்றாகவும் கருதப்படுகின்றது.

இருப்பினும், சுமார் 80 இலட்சம் முஸ்லீம்கள் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் பெரும்பான்மையினராக உள்ளனர். இந்தியா சுதந்திரம் அடைந்ததிலிருந்தே பாகிஸ்தான் காஷ்மீரை தங்கள் பகுதியாக இணைக்க விரும்புவதினால் இப்பகுதி தொடர்ந்து மோதலில் உள்ளது.

காஷ்மீரி முஸ்லீம்கள், இஸ்லாமிய சூஃபிய இயக்கதினரால் வழிநடத்தப்படுகின்றனர். யுத்தங்களுக்கும், மோதல்களுக்கும் இடையே வளர்ந்த இளம் தலைமுறையினர் தற்பொழுது இந்தியாவில் அமல்படுத்தப்பட்ட புதிய சட்டதிட்டங்களால் நம்பிக்கையும், திடனும் அற்றவர்களாய் உள்ளனர்.

வேலூர் மாவட்டத்தில் வசிக்கும் சுமார் 11% முஸ்லீம்களின் இரட்சிப்பிற்காக ஜெபியுங்கள். சபைகளில் தொடர் ஜெபங்கள் ஏறெடுக்கப்பட ஜெபியுங்கள்.

ஆப்பிரிக்காவிலுள்ள மௌரிடேனியா இஸ்லாமிய நாடாக உள்ளது. இங்குள்ள முஸ்லீம்கள் இரட்சிக்கப்படவும், இங்கு ஊழியங்கள் எழும்பவும் ஜெபியுங்கள்.

...பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல. என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் - சகரியா 4:6.

நாள் 21 மே 14

## ஜெபக்குறிப்புகள்:

1. காஷ்மீரில் இந்திய மிஷனரிகள் நீண்ட காலமாக பணியாற்றி வந்தாலும், இம்மக்களை சந்திக்கும் முயற்சிகள் மிகவும் குறைவாக உள்ளது. அவர்களின் முயற்சிகள் பெருக ஜெபியுங்கள்.
2. காஷ்மீரி மக்களின் கவனத்தையும், பக்தியையும் சிதறடிக்கும் பல காரியங்களுக்கு நடுவில் அவர்கள் சமாதானத்தையும் ஸ்திரத்தன்மையையும் அடையும்படி ஜெபியுங்கள்.
3. காஷ்மீரி மக்களிடையே பிரிவினைவாதத்தை தூண்டவும், ஊக்குவிக்கவம் செய்கின்ற மத மற்றும்அரசியல் தலைவர்களின் எண்ணங்களும், பொல்லாத ஆவிகளும் செயலற்றுப் போக ஜெபியுங்கள்.
4. இந்த பகுதியில் தரிசனமும், ஆத்தும பாரமும் பெற்ற ஊழியர்கள் எழும்பிட ஜெபியுங்கள்.

ஐக்கிய அரபு குடியரசு, இங்கிலாந்து, ஏமன், இந்த நாடுகளின் இரட்சிப்பிற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

குஜராத்தில் வாழும் 46 இலட்சம் இஸ்லாமியர்களை தேவன் சந்திக்கும்படி ஜெபியுங்கள்.

# சர்வதேச மாணவர் இயக்கங்கள்

கடந்த பத்தாண்டுகளில், பல முஸ்லீம் மாணவர்கள் வெளிநாடுகளுக்கு சென்று தங்கள் மேற்படிப்பைப் பெறுகிறார்கள். பல ஆண்கள் மற்றும் பெண் பிள்ளைகள் கிட்டத்தட்ட 5 ஆண்டுகள் தங்கள் குடும்பத்தினரைப் பிரிந்து வெளிநாடுகளில் தங்கி பயிலுகின்றனர். அங்கு கிறிஸ்தவ நண்பர்களை சந்திப்பது என்பது இயல்பாக நடக்க வாய்ப்பிருக்கிறது.



எடுத்துக்காட்டாக, ஒவ்வொரு வருடமும் சுமார் 15,000 முஸ்லீம் மாணவர்கள் இங்கிலாந்து தேசத்திற்கு சர்வதேச மாணவர்களாக செல்கின்றனர். மத்திய கிழக்கு தென் ஆப்பிரிக்கா, இந்தோனேசியா, மலேசியா மற்றும் மத்திய ஆசிய நாடுகளிலிருந்து திறமையான மற்றும் புத்திசாலித்தனமான முஸ்லீம் ஆண்கள் மற்றும் பெண்களின் இந்த இயக்கம் பல்கலைக் கழகங்களுக்கும், அரசாங்கங்களுக்கும் இடையில் ஏற்படுகிற ஒப்பந்தங்களால் சாத்தியமானது. இத்தகைய வாய்ப்புகள் மாணவர்களுக்கு மன அழுத்தத்தையும், தனிமையையும் தந்தாலும், சபைகளுக்கு, இந்த சர்வதேச முஸ்லீம் மாணவர்களை அன்போடு அரவணைக்கவும், முற்றிலும் மாறுபட்ட சமூகத்தில் அவர்களை வரவேற்கவும் ஒரு நல்ல வாய்ப்பாக இருக்கிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் வசிக்கும் சுமார் 10% இஸ்லாமியரின் இரட்சிப்பிற்காக ஜெபியுங்கள்.

பாலஸ்தீனாவிலுள்ள காஸாவில் சுமார் 1 கோடியே 8 இலட்சத்து 69,000 இஸ்லாமியர்களை தேவன் தொடும்படி ஜெபியுங்கள். அங்கு வாழும் 5 இலட்சம் அகதிகளை தேவன் தொடும்படி ஜெபியுங்கள்.

அமெரிக்கா, நைஜீரியா, அசர்பெய்ஜான் இந்த நாடுகளின் இரட்சிப்பிற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

இமாச்சலப்பிரதேசத்தில் வாழும் 2 லட்சம் இஸ்லாமியர்களை தேவன் சந்திக்கும்படி ஜெபியுங்கள்.

மேலும், நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள் என்றார் - மத்தேயு 21:22.



நாள் 22 மே 15

## ஜெபக்குறிப்புகள்:

1. வீட்டிலிருந்து வெகு தொலைவில் உள்ள முஸ்லீம் மாணவர்களுக்காக ஜெபிப்போம். முக்கியமாக அவர்களுக்கு ஆதரவான கிறிஸ்தவ நண்பர்கள் கிடைக்கும்படியாகவும், படிப்பிலும் சிறந்து விளங்கவும் ஜெபிப்போம்.
2. சர்வதேச நண்பர்கள் அமைப்பு போன்ற அமைப்புகள் இத்தகைய சர்வதேச மாணவர்களின் மத்தியில் ஊழியம் செய்து கிறிஸ்துவின் அன்பை முஸ்லீம் மாணவர்களுக்கு காட்டவும், ஒரு அர்த்தமுள்ள உரையாடல் அவர்களுக்குள் ஏற்படும்படியான ஞானத்தையும், ஆழ்ந்த நட்பையும் தேவன் அருளும்படியாய் ஜெபிப்போம்.
3. கிறிஸ்தவர்கள் மற்றும் சபைகள் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி முஸ்லீம் மாணவர்களோடு நட்பை ஏற்படுத்தவும், தேவனுடைய அன்பை வெளிப்படுத்தும் கரிசனையுள்ளவர்களாய் மாறவும் ஜெபிப்போம்.
4. சாரா மற்றும் முகம்மது போன்று ஆயிரக்கணக்கான மாணவர் மாணவிகள் கிறிஸ்துவின் அன்பை ருசி பார்க்க இங்கிலாந்து, கனடா, அமெரிக்கா, ஐரோப்பா பகுதிகளில் உள்ள கிறிஸ்தவ மாணவர்கள் உதவ ஜெபிப்போம்.
5. இஸ்லாமிய போதனைக்குழுக்கள், கல்வி நிலையங்களில் உள்ள நிர்வாகிகள், பயிற்சியாளர்கள், பயிற்சி பெறுவோர், நித்திய இரட்சிப்பை பெறும்படி பாரத்தோடு மன்றாடி ஜெபிப்போம்.

# இந்தியாவைச் சேர்ந்த "மாப்லா பெண்கள்"

இந்தியாவைச் சேர்ந்த மற்ற எந்த கிராமப் பகுதியிலும் காண முடியாத ஒரு காரியத்தை, அழகான கேரள மாநிலத்தில் காண முடியும். இங்கு பெண்கள் ஆண்களோடு இணைந்து பள்ளிக்குச் செல்வதை இயல்பாக காண முடியும். கடற்கரையை ஒட்டியுள்ள இந்த நடுத்தர வர்க்க கிராமங்கள் அழகான மசூதிகள் மற்றும் மதரஸாக்களை கொண்டிருக்கிறது. இங்கு அவர்களது பிள்ளைகள் (இரு பாலரும்) குரானைப் படிக்கவும், எழுதவும், ஓதவும் கற்றுக் கொள்கின்றனர். இங்கு வசிக்கும் சுமார் 1 கோடி மக்களும் நன்கு படித்தவர்களாய், பல இடங்களுக்கு பிரயாணம் செய்தவர்களாய் உள்ளனர். பெண்களின் மதிப்பை மற்றும் அவர்களின் உரிமைகளை இந்த மாப்லா மக்கள் மிகவும் மதிக்கின்றனர்.



ஜனவரி 2019ல் சுமார் 50 இலட்சம் பெண்கள் இணைந்து 385 மைல் நீளத்திற்கு ஒரு "பெண்களின் பெருஞ்சுவரை" சாலையில் உருவாக்கினார்கள். இறைவன் மற்றும் மனிதனின் பார்வையில் பெண்களுக்கு மதிப்பு மற்றும் உரிமைகள் இருக்கிறது என்ற செய்தியை அமைதியாகப் பரப்புவதற்காக அவர்கள் சாலையைப் பார்த்தவாறு தங்கள் வலது கைகளை நீட்டி தீர்க்கமாக நின்று தங்கள் கருத்தை நிலைநாட்டினார்கள்.

எனவே, இதே தைரியத்துடனும், நம்பிக்கையுடனும் மாப்லா பெண்கள் தங்கள் குடும்பத்தையும், தேவனுடைய ராஜ்யத்திற்கு நேராக நடத்துவார்கள் என்பதில் ஐயமில்லை.

தஞ்சாவூரில் வசிக்கும் சுமார் 8% இஸ்லாமியரின் இரட்சிப்பிற்காக ஜெபியுங்கள்.

சிங்கப்பூரில் உள்ள சுமார் 14% இஸ்லாமியரின் இரட்சிப்பிற்காக ஜெபியுங்கள்.

போஸ்னியா, சாட், காங்கோ இந்த நாடுகளின் இரட்சிப்பிற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

ஜார்கண்ட்டில் வாழும் 37 இலட்சம் இஸ்லாமியர்களை தேவன் சந்திக்கும்படி ஜெபியுங்கள்.

என்னை கேளும். அப்பொழுது ஜாதிகளை உமக்குச் சுதந்திரமாகவும், பூமியின் எல்லைகளை உமக்குச் சொந்தமாகவும் கொடுப்பேன் - சங்.2:8

நாள் 23
மே 16

## ஜெபக்குறிப்புகள்:

1. மாப்லா குடும்பங்களில் பல ஆண்கள் தங்கள் குடும்பத்தைப் பிரிந்து, வளைகுடா நாடுகளில் பணிபுரிகின்றனர். தேவன் அந்த குடும்பங்களை பாதுகாக்க ஜெபிப்போம்.
2. கிறிஸ்துவுக்குள் தாங்கள் யார் என்பதை மாப்லா பெண்கள் அறிந்து கொள்ளும்படியாகவும், ஒவ்வொரு மக்களும் கிறிஸ்துவுக்குள் தேவனுடைய சுதந்தரருமாய் இருக்கிறார்கள் என்பதை அறியும்படியும் ஜெபியுங்கள்.
3. ஆயிரம் வருடங்களுக்கு முன்பே, மாப்லா மக்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். இன்று 1 கோடி மாப்லா மக்கள் உள்ளனர். அவர்கள் இராஜ்யத்தின் சுவிசேஷத்தை அறிந்து கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளும்படியாக ஜெபிப்போம். மேலும், கிறிஸ்துவை அறிந்து, அந்த நல்ல செய்தியை மற்றவர்களுக்கு பகிரவும் ஜெபிப்போம்.
4. இந்த மக்களை சந்திக்கும் பாரமும், அபிஷேகமும் பெற்ற ஊழியர்கள், மற்றும் சபைகள், ஸ்தாபனங்கள் பெருகிட ஜெபியுங்கள்.
5. இத்தனை ஆண்டுகளாக தங்கள் முன்னோர்களின் போதனைகளையே கேட்டு பழகிய இவர்கள், கிறிஸ்துவின் அன்பினால் விடுதலையாக்கப்பட, அடிமைத்தன கட்டிலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.
6. கேதாரின் ஆடுகளெல்லாம் உன்னிடத்தில் சேர்க்கப்படும். நெபாயோத்தின் (இஸ்மவேலன் பிள்ளைகள், ஆதி.25:13) கடாக்கள் என் பலிபீடத்தின்மேல் ஏறும். (ஏசாயா 60:7)-ன்படி அரபு நாடுகளின் இஸ்லாமிய சகோதர சகோதரிகள் உலக இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவண்டை கூட்டி சேர்க்கப்பட பாரத்துடன் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

# கலாச்சார இஸ்லாமியர்கள்

கலாச்சார கிறிஸ்தவர்கள் என்ற வார்த்தையை கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அதாவது கிறிஸ்தவர் என்று அழைக்கப்பட்டு, பொதுவாக கிறிஸ்தவ கொள்கைகளை ஏற்றுக்கொண்டு, பொதுவான கிறிஸ்தவ வழிமுறைகளில் நடப்பவர். ஆனால், கிறிஸ்தவம் மட்டுமே தன்னுடைய வாழ்க்கைக்கு மிகவும் அவசியமில்லை என்று கருதுபவர்.



ஒரு கலாச்சார கிறிஸ்தவர் என்பவர் நாத்திகர் அல்லது யதார்த்தவாதி அல்லது தன்னை ஒரு ஆன்மீகப் பாதையில் நடப்பவன் என்று கூறிக்கொள்வார். ஆனால் சரியான சமய ஈடுபாடு இல்லாதவர் ஆவார். இவர்களில் பலர் பாரம்பரிய கிறிஸ்தவ குடும்பங்களில் வளர்பவர்கள். பல கருத்து வேறுபாடுகள் இவர்களுக்கு விசுவாசத்தைக் குறித்து இருந்தாலும், பெயரளவில் தங்களை கிறிஸ்தவர்களாகக் காட்டிக் கொள்கின்றனர்.

இவர்களைப் போன்றே கலாச்சார இஸ்லாமியர்களும் உள்ளனர். மத அர்ப்பணிப்பு அல்லது பொறுப்புணர்வு இஸ்லாமியர்கள் மத்தியில் குறைந்து வர தீவிரவாதம், மத தலைவர்களின் ஒழுங்கின்மைகள் மற்றும் மதக் கட்டுப்பாடுகளும் காரணங்களாக உள்ளன.

இத்தகைய கலாச்சார இஸ்லாமியர்கள் உலகம் முழுவதும் பரவலாக காணப்படுகின்றனர். ஆனால் குறிப்பாக, ஐரோப்பா, மத்திய ஆசியா, வட அமெரிக்கா நாடுகளில் அதிகமாகவும், மத்திய கிழக்கு, தென் கிழக்கு ஆசியா ஆகிய பகுதிகளில் சில இடங்களிலும் காணப்படுகின்றனர். "பியூ ஆய்வு மையம்" எடுத்த சமீபத்திய கணக்கெடுப்பின்படி, அஸபெய்ஜான்-ல் 1 சதவீதம், அல்பேனியாவில் 5 சதவீதம் மக்கள் மட்டுமே மசூதிக்கு தொடர்ந்து செல்கின்றனர்.

நாகப்பட்டினத்தில் வசிக்கும் சுமார் 9% முஸ்லீம்கள் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.

சுமார் 61% முஸ்லீம்களை கொண்ட மலேசியா நாட்டிற்காக ஜெபியுங்கள். சுவிசேஷத்திற்குள்ள தடைகள் விலகும்படியும், சபைகளில் ஜெபம் பெருகும்படியும் ஜெபியுங்கள்.

வசனம்: ...கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்கிறான். தட்டுகிறவனுக்கு திறக்கப்படும் - மத்தேயு 7:8.



## ஜெபக்குறிப்புகள்:

நாள் 24

மே 17

1. இறைவனை பற்றிய நம்பிக்கையை முக்கியமாக கருதகிற இஸ்லாமியர்கள், அவர்கள் ஏங்குகிற நம்பிக்கையை நம் கர்த்தராகிய இயேசுவில் கண்டடைய ஜெபிப்போம்.
2. கிறிஸ்தவர்களும் தங்கள் ஜெபங்களில் தொடர்ந்து, தங்கள் விசுவாசத்தை பரிசோதித்து, அறிந்து விசுவாசத்தில் நிலைத்திருந்து கிறிஸ்துவின் சாட்சிகளாய் நிலைநிற்கும்படி ஜெபிப்போம்.
3. இத்தகைய கலாச்சார முஸ்லீம் மக்களுக்காக தொடர்ந்து ஜெபிப்பவர்கள் எழும்ப ஜெபிப்போம்.
4. இத்தகைய முஸ்லீம்கள் இருதயத்தில் தேவனை தேடுகிற எண்ணம் உண்டாகி கிறிஸ்துவை அறிய தேவன் கிரியை செய்ய ஜெபிப்போம்.
5. மத வைராக்கியம், தீவிரவாதங்கள், பரலோகம் (ஜன்னத்) போவோம் என்ற நிச்சயமில்லாத நிலை, உள்நாட்டு பிரிவினை கலவரங்களை இஸ்லாமியர்கள் பகுத்தறிந்து, எனக்கு இரட்சிப்பின் பாதையை தெளிவாய் போதிக்காத இஸ்லாத்தை நான் ஏன் பின்பற்ற வேண்டும் என அறியவும், கிறிஸ்துவின் அன்பினால் ஈர்க்கப்படவும் ஜெபிப்போம்.

எகிப்து, மலாவி, மாரிடோனியா இந்த நாடுகளின் இரட்சிப்பிற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

கேரளாவில் வாழும் 76 இலட்சம் இஸ்லாமியர்களை தேவன் சந்திக்கும்படி ஜெபியுங்கள்.

# கிர்கிஸ்தானின் கிறிஸ்தவ இயக்கம்

பெரிய மலைகளின் அடிவாரத்தில் வசிக்கும் "கிர்கிஸ்" மக்கள், அவர்களின் மரபுகளினால் பெருமிதம் அடைபவர்களாக உள்ளனர். அதாவது முதலில் அவர்கள் "கிர்கிஸ்" பின்புதான் இஸ்லாமியர்கள் என்று வாழ்பவர்கள். சோவியத் யூனியனின் சரிவிற்குப் பின்புதான் இவர்களால் தங்களுடைய இன அடையாளத்தை கண்டுகொள்ள முடிந்தது. அதுவரை சோவியத் யூனியனின் ஆதிக்கத்தால் பாதிக்கப்பட்டு இருந்த இவர்கள் முழுவேகத்துடன் இஸ்லாமிய பழக்கவழக்கங்களை பின்பற்றலாயினர்.



அந்நியர்களை ஏற்றுக்கொண்டு எளிதில் நண்பராகும் வழக்கமுடைய கிர்கிஸ்தானியர்கள் சிலர் கிறிஸ்தவர்களால் சந்திக்கப்பட்டு விசுவாசத்திலும் வந்துள்ளனர். புதிதாக தொடங்கியுள்ள இந்த கிறிஸ்தவ இயக்கமானது மேலும் பரவ இங்குள்ள கிறிஸ்தவர்கள் இன்னும் அதிகமாக செயல்பட வேண்டும்.

சென்னையில் வசிக்கும் சுமார் 10% இஸ்லாமியரின் இரட்சிப்பிற்காக ஜெபியுங்கள்.

இஸ்லாமிய நாடான மாலத்தீவு சந்திக்கப்படவும், இங்கு ஊழியர்கள் எழும்பிடவும் ஜெபியுங்கள். சுவிசேஷ பணிக்கு உள்ள தடைகள் விலகும்படி ஜெபியுங்கள்.

எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம் பண்ணி, ...விழித்துக் கொண்டிருங்கள் - எபேசியர் 6:18.

நாள் 25 மே 18

## ஜெபக்குறிப்புகள்:

1. கிர்கிஸ்தானிலுள்ள முஸ்லீம்களில் அநேகர் இன்னும் சந்திக்கப்படாத நிலையிலுள்ளனர். இந்நிலை மாற ஜெபியுங்கள்.
2. இங்கு புதிதாக தொடங்கியிருக்கும் கிறிஸ்தவ இயக்கம் பரவி படரவும், புதிதாக இரட்சிக்கப்பட்டவர்கள் விசுவாசத்தில் வளரவும் ஜெபியுங்கள்.
3. இங்குள்ள கிறிஸ்தவர்கள் இஸ்லாமியருக்கு சுவிசேஷத்தை அறிவிக்கவும்,பாரமும் அபிஷேகமும் பெற்ற ஊழியர்கள் எழும்பிடவும் ஜெபியுங்கள்.

மியான்மர், பிலிப்பைன்ஸ், சஹாரா, இந்த நாடுகளின் இரட்சிப்பிற்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்.

மேகாலயாவில் வாழும் 87 ஆயிரம் இஸ்லாமியர்களை தேவன் சந்திக்கும்படி ஜெபியுங்கள்.

# வல்லமையின் இரவு



சுமார் 1400 ஆண்டுகளுக்கு முன்பு இன்றுதான் முகமது நபி அவர்களுக்கு குர்-ஆனின் முதல் ஆயத்து (வசனம்) வெளிப்படுத்தப்பட்ட நாளாகக் கருதப்படுகின்றது. மேலும், இந்த இரவில் ஏறெடுக்கப்படும் துவாக்கள் (பிரார்த்தனைகள்) மற்றும் புண்ணியங்கள் ஆயிரம் மாதங்களுக்கு செய்யும் துவாக்கள் மற்றும் புண்ணியங்களுக்கு ஈடானது என்றும், வரும் காலங்களின் "தலைவிதியை" நிர்ணயிக்கும் இரவாகவும் கருதப்படுகின்றது.

இதற்காக பக்தியுள்ள முஸ்லீம்கள் இந்த இரவு முழுவதும் மசூதிகளிலோ அல்லது தர்காக்களிலோ தங்கியிருந்து குர்ஆனை ஓதுவதிலும், துவாக்களை ஏறெடுப்பதிலும் அதிதீவிரமாக செயல்பட்டு வருகின்றனர். இதற்கு "லயத் அல் ஹாதிர்" என்று பெயர்.

திருச்சிராப்பள்ளியில் வசிக்கும் சுமார் 7% இஸ்லாமியருக்காக ஜெபியுங்கள்.

55% சன்னி இஸ்லாமியரையும், 46% ஷியா இஸ்லாமியரையும் கொண்ட ஏமன் நாட்டின் இரட்சிப்பிற்காக ஜெபியுங்கள்.

பிரான்ஸ், கானா, கயானா இந்த நாடுகளின் இரட்சிப்பிற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

நாகாலாந்தில் வாழும் 41 ஆயிரம் இஸ்லாமியர்களை தேவன் சந்திக்கும்படி ஜெபியுங்கள்.

ஜான் வெல்ச்: ஒரு நாளில் 8 அல்லது 10 மணி நேரம் ஜெபிக்காவிட்டால் நான் வீணாகப் போய்விட்டேன் என்று நினைக்கிறேன்.



நாள் 26 மே 19

## ஜெபக்குறிப்புகள்:

1. முஸ்லீம்கள் இந்த இரவில் இறைவனின் வெளிப்பாட்டிற்காக அவரை தீவிரமாய் தேடுகின்றார்கள். இந்த நாளில் இயேசு தன்னை அவர்களுக்கு கிருபையாக வெளிப்படுத்த ஜெபியுங்கள்.
2. கிறிஸ்தவர்கள் இஸ்லாமியருக்கு இந்த நாளில் தைரியமாக சத்தியத்தை அறிவிக்க ஜெபியுங்கள். தேவ வல்லமையை வெளிப்படுத்த ஜெபியுங்கள்.
3. இயேசு கிறிஸ்து ஒருவரே பாவம் போக்கும் ஜீவபலி (குர்பானி) என்று இஸ்லாமியர்கள் புரிந்து கொள்ள ஜெபியுங்கள்.
4. மரித்தோரை உயிரோடு எழுப்பிய இயேசுவே வல்லமையுள்ள நித்திய பிதா, சமாதானப் பிரபு என்று அறிந்து கொள்ள ஜெபியுங்கள்.
5. 30 நாட்கள் தொடர் நோன்பில் எந்த பிரயோஜனமும் இல்லை என்று அனைத்து முஸ்லிம்களும் புரிந்து, பாவ மன்னிப்பிற்காக, சுகத்திற்காக வேதாகமத்தை தேடி வாசிக்க ஜெபியுங்கள்.
6. ரம்ஸான் நோன்பில் பங்குபெறும் அனைவரும் இயேசுவை எப்படியாவது அறிந்து கொள்ள ஜெபியுங்கள். நோன்பு வெறும் சரீர முயற்சி என்று அறிந்து, இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத் தன்மையை புரிந்து கொள்ள ஜெபியுங்கள்.

# பீமாஸ் (அ) எம்போஜோக்கள் - இந்தோனேசியா

"கடந்த வாரம் என் தாயாருக்கு ஞானஸ்நானம் கொடுத்தேன்" என்றார் ஒரு இளம்பெண். இந்தோனேசியாவைச் சேர்ந்த சம்பாவா என்னும் தீவின் கிழக்குப் பகுதியில், இயேசுவை நோக்கி ஒரு சிறு விசுவாசத்தின் இயக்கம் ஆரம்பித்திருக்கிறது.



இறைவன் எங்கள் மத்தியில் கிரியை செய்து கொண்டு இருக்கிறார்" என செய்திகள் கிடைக்கின்றன. முன்பு 200 - 300 வரையிலான கிறிஸ்தவர்கள் மட்டுமே பட்டணத்திற்கு அருகிலான சில கிராமங்களில் இருந்தார்கள். அவர்களோடு எங்களுக்கு அவ்வளவாய் தொடர்பு இல்லை. ஆனால் கடந்த 5 வருடமாக இறைவன் இயேசு தீர்க்கதரிசிக்கும் மேற்பட்டவர் என எங்களுக்கு காண்பித்திருக்கிறார். சில கிறிஸ்தவர்கள் இங்கு எங்களிடம் வந்து "இஞ்ஜில்" (Injil) (சுவிசேஷம்) மூலமாக இயேசு உண்மையிலேயே யார் என நாங்கள் கண்டறியும்படி உதவினர். நாங்கள் எங்கள் கலாச்சாரத்தையோ, எங்கள் சமுதாயத்தையோ மாற்றிக்கொள்ளவில்லை. இயேசுவைப் பற்றி நாங்கள் ஒவ்வொருவரும் எங்கள் குடும்பத்தினரிடம் சொல்லுகிறோம்.

எம்போஜோ (அ) பீமாஸ் என சொல்லப்படுகிற சுமாராக 8,00,000 மக்கள் இருக்கும் இந்த ஜனக்கூட்டத்தின் மத்தியில் பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்கிறார். இஸ்லாமிய அடக்குமுறைகள் இருந்தபோதிலும், கிறிஸ்துவை விசுவாசிப்போர்கள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றனர். புதிய ஏற்பாடு மற்றும் இயேசு கிறிஸ்துவைக் குறித்த தொலைக்காட்சி படம் போன்றவை மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. மற்றும் கிறிஸ்துவ வானொலி நிகழ்ச்சிகளும் கிடைக்கிறது.

புதுக்கோட்டையில் வசிக்கும் சுமார் 7% இஸ்லாமியரின் இரட்சிப்பிற்காக ஜெபியுங்கள்.

குவைத் தேசத்தில் ஆராதனை செய்ய இன்னும் சுதந்திரம் கிடைக்கவும், வெளிநாட்டு மிஷனெரிகளை கர்த்தர் வல்லமையாய் பயன்படுத்தவும் பாரத்துடன் ஜெபிப்போம்.

ஈராக், கென்யா, சைபீரியா இந்த நாடுகளின் இரட்சிப்பிற்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்.

ராஜஸ்தானில் வாழும் 51 இலட்சம் இஸ்லாமியர்களை தேவன் சந்திக்கும்படி ஜெபியுங்கள்.

கேத்தரின்: கிறிஸ்துவின் பாடுகளை உணர்வதில் நான் மிகுந்த வேதனையை அனுபவித்த நேரம் பிறரது இரட்சிப்பிற்காகக் கெஞ்சி மன்றாடிய வேளையே.

**நாள் 27 மே 20**

**ஜெபக்குறிப்புகள்:**

1. இயேசுவை நோக்கின இந்த "விசுவாச இயக்கம்" இன்னும் விசுவாசத்திலும் , கிறிஸ்துவின் அன்பிலும், ஐக்கியத்திலும் வளர்ந்து பெருக ஜெபிப்போம் (எபேசியர் 3:16-19).
2. எம்போஜா மக்களின் கல்வி மற்றும் வேலை வாய்ப்புகள் பெருகவும். அவர்களது கலாச்சாரம் காக்கப்படவும் இவைகள் அவசியமானது என நம்பி அதற்கான பாதையில் செல்லவும் ஜெபியுங்கள்.
3. இந்தோனேசியாவில் இயேசுவை அறிவிக்கும் அதிகமானோர் எழும்பவும், ஒவ்வொரு இன மக்களுக்கும் ஏற்றவாறு சுவிசேஷத்தை அறியாதவர்களுக்கு அறிவிக்கவும், தேவன் சுவிசேஷகர்களை எழுப்ப ஜெபியுங்கள் (வெளி.5:9).
4. பீமாஸ் ஜனங்களின் ஏழ்மை நிலை மாறவும், இயேசுவே எல்லா ஜாதியான, பாஷைகளை உடைய ஜனங்கள் ரட்சிக்க வந்தார் என நம்பவும் ஜெபிப்போம்.

# இலண்டனிலுள்ள இஸ்லாமியர்கள்

குறைந்தபட்சம் 15 இலட்சம் இஸ்லாமியர்கள் இலண்டனில் வசிக்கின்றனர். அதாவது இலண்டனில் 6 பேர்களில் ஒருவர் இஸ்லாமியர். என்ன காரியங்கள் இவர்கள் சமூகத்தை பாதிக்கிறது.



**இஸ்லாமியர்கள் மிகவும் சமய ஈடுபாடு உடையவர்களாகிறார்கள்:**

இத்தகைய ஈடுபாடு பெரும்பாலும் இரண்டாம் தலைமுறையான இஸ்லாமிய குடியேறிகளிடம் காணப்படுகிறது. அவர்கள் தங்கள் பெற்றோர்களுடைய சொந்த தேசத்தோடு தொடர்பு ஏற்படுத்தி கொள்வதில்லை. ஆனால், இங்கிலாந்து நாடு அவர்கள் தாராளமாக எந்த சமயத்தையும் பின்பற்ற அனுமதியளிக்கிறது. எனவே, அவர்கள் தங்கள் முதன்மையான அடையாளத்தை இஸ்லாம் சமயத்தில் தெரிந்தெடுக்கின்றனர். எனவே, அவர்கள் தங்கள் பெற்றோரைக்காட்டிலும் அதிக சமய ஈடுபாடு உடையவர்களாகின்றனர்.

**இஸ்லாமியர்கள் இஸ்லாம் சமயத்தை கைவிடுகின்றனர்:**

பல இனத்தைச் சேர்ந்த இஸ்லாமியர்கள் தங்களுடைய மதத்தை விட்டுவிடுகின்றனர். அரபு மற்றும் சோமாலிய முஸ்லீம்களும் இதில் அடங்குவர். ஏனென்றால், அரசியல் மற்றும் தீவிரவாத இயக்கங்கள் இஸ்லாத்தை சரியாக கடைபிடிக்கிறோம் என்று சொல்லியும், சில போதனைகளை அவர்களால் சரி செய்ய இயலாமல் தோல்வி அடைந்துள்ளனர். பலர் தங்களை நாத்திகர் என்று கூறிக்கொள்கின்றனர். மேலும், பலர் கடவுள் மேல் நம்பிக்கை வைத்துள்ளனர். ஆனால், எந்த மதத்தையும் நம்பவில்லை. ஒரு சிலர் சுவிசேஷத்தைக் கேட்டுள்ளனர்.

கிருஷ்ணகிரியில் வசிக்கும் சுமார் 7% இஸ்லாமியருக்காக ஜெபியுங்கள்.

லிபியாவில் வசிக்கும் சுமார் 97% இஸ்லாமியரின் இரட்சிப்பிற்காக ஜெபியுங்கள்.

ரிச்சர்ட் கால்டேன்: பிறனுடைய ஆத்தும இரட்சிப்பைக் குறித்த அக்கறை கொள்ளாதவன் கிறிஸ்தவன் என்று சொல்லிக் கொள்ள தகுதியற்றவன்.



நாள் 28

மே 21

**ஜெபக்குறிப்புகள்:**

1. சொந்தமான இடத்தையும் அடையாளத்தையும் தேடும் முஸ்லீம் மக்கள் கிறிஸ்துவில் அவைகளை கண்டடைய ஜெபிக்கவும்.
2. இலண்டனிலுள்ள கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்தை முஸ்லீம் மக்களிடம் பகிர்ந்து கொள்ளும்படியான தருணங்கள் ஏற்பட ஜெபிப்போம்.
3. இலண்டன் மிகுந்த செல்வாக்கையும், வாய்ப்பையும் கொண்ட நகரம். உலகெங்கிலும் தொடர்புகள் இருப்பதால் அங்கு வசிக்கும் முஸ்லீம்களுக்கிடையே கிறிஸ்துவின் அன்பு உருவாக ஜெபிப்போம்.
4. அன்பையும், மனித நேயத்தையும் போதிக்கும் இயேசுவே தேவன் என்று லண்டன் வாழ் இஸ்லாமியர்கள் ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

சோமாலியா, சிரியா, டோகா இந்த நாடுகளின் இரட்சிப்பிற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

தமிழ்நாட்டில் வாழும் 42 இலட்சம் இஸ்லாமியர்களை தேவன் சந்திக்கும்படி ஜெபியுங்கள்.

# சோமாலியாவிலுள்ள சோமாலிஸ்

ஒருவரோடொருவர் பழகக்கூடியவர்கள். பல ஆண்டுகளாக அங்கு உள்நாட்டு போர் இருந்தபோதும், அவர்கள் ஒரு நீண்ட காலமாக பழகிய அயல் நாட்டவரை நம்புவதைக் காட்டிலும் ஒரு சோமாலியரையே நம்புவர்.



இஸ்லாம் என்னும் மதத்தின் பேரால் உண்டான வன்முறைகள் இரண்டு கண்கூடாக காணக்கூடிய இயக்கங்களை மக்களிடையே உண்டாக்கியிருக்கிறது.

பல முஸ்லீம்கள் முஸ்லீம் மதத்தையே கைவிட்டு விடுகின்றனர். இரண்டாவதாக முழுவதுமாகவே, இஸ்லாம் மதத்தையே விட்டு, கிறிஸ்துவின் பிள்ளைகளாய் மாறிக்கொண்டு வருகின்றனர்.

சோமாலிய சபைகள் 1991ல் இருந்து ஒரு நல்ல வளர்ச்சியை கொண்டிருக்கிறது. அங்கு 2008-ல் கொல்லப்பட்ட உள்ளூர் சுவிசேஷகரின் மரணத்திலிருந்து சோமாலிய சபையின் வளர்ச்சி ஒரு குறிப்பிடத்தக்க வளர்ச்சி கண்டுள்ளது.

பாஸ்டர் பாத்திமா, 29, சோமாலியாவில் ஏற்பட்டுள்ள எழுப்புதலை அப்போஸ்தலர் நாட்களில் காணப்பட்ட எழுப்புதலைப் போன்று இருப்பதாகக் கூறுகிறார். இது சோமாலியாவின் எழுப்புதல் என்கிறார்.

இந்தியாவில் வசிக்கும் சுமார் 18 கோடி இஸ்லாமியரின் இரட்சிப்பிற்காக ஜெபிப்போம். இவர்களுக்காக தொடர் ஜெபங்கள் பெருக ஜெபியுங்கள்.

சுமார் 82மூ இஸ்லாமியரைக் கொண்ட அல்பேனியா நாட்டின் இரட்சிப்பிற்காக ஜெபிப்போம்.

உகாண்டா, உஸ்பெகிஸ்தான், பாலஸ்தீனம் இந்த நாடுகளின் இரட்சிப்பிற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

உத்தரப்பிரதேசத்தில் வாழும் 3 கோடியே 70 இலட்சம் இஸ்லாமியர்களை தேவன் சந்திக்கும்படி ஜெபியுங்கள்.

நீர் அவரை நோக்கி விண்ணப்பம் பண்ண, அவர் உமக்கு செவி கொடுப்பார் - யோபு 22:27.

## நாள் 29 ஜூலை

**ஜெபக்குறிப்புகள்:**

1. சோமாலியாவில் இஸ்லாமில் நம்பிக்கை யிழந்த ஒவ்வொரு வரும் இயேசுவின் பிள்ளைகள் ஆகும்படி ஜெபிப்போம்.
2. யோவான் 16:22-ல் இயேசு சொன்ன சமாதானம் இந்த மக்கள் அறிந்து கொள்ளுபடி ஜெபிப்போம். மேலும் அந்த சமாதானம் சோமாலியாவில் உண்டாகும்படி அதற்கென்று உழைக்க தேவன் அவர்களுக்கு உதவி செய்ய ஜெபிப்போம்.
3. புதிதாக மற்றும் பெருமளவில் வளருகிற சபைகள் சரியாக கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.
4. தென் சோமாலியாவில் உருவாகியிருக்கும் புதிய வீட்டு சபைகள் இன்னும் பல மடங்கு பெருகவும், சீஷர்கள் தொகை பெருகவும் ஜெபிப்போம்.

# மத்திய கிழக்கின் இஸ்லாம் பின்னணி விசுவாசிகள்



எனக்கு இந்த காரியம் ரமலான் சமயத்தில் ஏற்பட்டது. என் பெயர் பாத்திமா. எனக்கு இயேசுவைப் பற்றி தரிசனம் கிடைத்தது. என்னால் அதை மறக்க முடியவில்லை. அவர் என்னை அன்பாய் நோக்கிப் பார்த்து, "வா, என்னை பின்பற்று" என்றார். அன்று நான் அனுபவித்த அந்த சமாதானம் நான் இதுவரை அனுபவித்திராதது. நான் ஒரு வைராக்கியமான முஸ்லீம் குடும்பத்தைச் சேர்ந்தவர். பின்பு இரகசியமாக இயேசுவைக் குறித்து தேட ஆரம்பித்தேன். ஆனால் பல சவுதி அரேபியர்கள் தொலைக்காட்சியிலேயே தாங்கள் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் என்று பயமின்றி அறிக்கையிடுவதைப் பார்த்தேன்.

மத்திய கிழக்கு நாடுகளில் ஒரு மாற்றம் உண்டாகியிருக்கிறது. அவர்கள் தேவனை அறிந்து கொள்ள மிகவும் வாஞ்சையாயிருக்கிறார்கள். கிறிஸ்தவ தொலைக்காட்சி நிகழ்ச்சி மூலம், கனவு மற்றும் தரிசனம் மூலம் இயேசுவை அறிந்து கொள்கிறார்கள். கடுமையான மிரட்டல் மற்றும் கொலை மிரட்டல்கள் மத்தியிலும் மிகவும் உறுதியாக இயேசுவை பின்பற்ற மனதாயிருக்கிறார்கள்.

கோயமுத்தூரில் வசிக்கும் சுமார் 7% இஸ்லாமியரின் இரட்சிப்பிற்காக ஜெபியுங்கள்.

புருனேயில் வசிக்கும் சுமார் 80% இஸ்லாமியரின் இரட்சிப்பிற்காக ஜெபியுங்கள். பிசாசின் வல்லமைகள் விலகும்படி ஜெபியுங்கள்.

சோமாலியா, சிரியா, டோகா இந்த நாடுகளின் இரட்சிப்பிற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

தமிழ்நாட்டில் வாழும் 42 இலட்சம் இஸ்லாமியர்களை தேவன் சந்திக்கும்படி ஜெபியுங்கள்.

ரிச்சர்ட் கால்டேன்: பிறனுடைய ஆத்தும இரட்சிப்பைக் குறித்த அக்கறை கொள்ளாதவன் கிறிஸ்தவன் என்று சொல்லிக் கொள்ள தகுதியற்றவன்.



**ஜெபக்குறிப்புகள்:**

1. நன்கு வளர்ந்த சபைகள் இத்தகைய இஸ்லாமிய பின்புலம் கொண்ட விசுவாசிகளை மதித்து, வரவேற்று தங்களோடு இணைத்துக்கொள்ள ஜெபிப்போம்.
2. இஸ்லாமிய பின்புலம் கொண்ட விசுவாசிகள் நன்கு கிறிஸ்துவில் வளர்ந்த விசுவாசிகளோடு ஐக்கியம் கொண்டு கிறிஸ்துவில் வளர ஜெபிப்போம்.
3. புதிய சபைகள் உருவாகவும், அவைகள் பல இன ஜனங்களிலும் கிறிஸ்துவைக் கண்டு கொண்டவர்களை சபைகளில் அரவணைத்து ஒரு குடும்பம் போல எண்ணி நடக்கவும் - இப்படியாக மாற்றங்கள் உண்டாகவும் ஜெபியுங்கள்.
4. மத்திய கிழக்கு தேசங்களில் காணப்படும் மத சுதந்திரமின்மை, கிறிஸ்தவர்களுக்கு பாதுகாப்பின்மை மற்றும் பயம் மாறி சுவிசேஷத்திற்கு திறந்த வாசல் உண்டாக ஜெபிப்போம்.

## ஈஃகிது – அல் – பிதர் தொடர்ச்சியான ஜெபம்.

தொடர்ந்து ஜெபியுங்கள். பிறை தோன்றியதும் இஸ்லாமிய புதிய மாதம் தொடங்குகிறது. நோன்பை முறிக்கும் திருவிழாவும் தொடங்குகிறது.

30 நாட்கள் நோன்பிற்கு பின்பு, ஈத் விழா 3 நாளைக்குக் கொண்டாடப்படுகிறது. இந்த நாட்களில் புதிய ஆடைகள் வாங்கி, பல பரிசுப் பொருட்களை பகிர்ந்துக் கொண்டு, நல்ல உணவு சமைத்து உண்பர். பெரும்பாலான முஸ்லீம் நாடுகளில் தெருக்கள் அலங்கரிக்கப்பட்டு ஈத் திருநாள் கொண்டாடப்படுகிறது.

ஈஃகிது விழா பெரும்பாலான முஸ்லீம் மக்களுக்கு அதிகாலையில் தொழுகையோடு ஆரம்பமாகிறது. பின்பு "ஜக்காத்" எனப்படும் ஏழைகளுக்கு தங்களால் முடிந்த பண உதவிகளை அளிக்கின்றனர். இது இஸ்லாத்தின் ஐந்து தூண்களில் ஒன்று.

ரமதான் நோன்பு இந்த 30 நாளோடு முடியலாம். ஆனால், நீங்கள் தொடர்ந்து உங்களுக்கு தெரிந்த இஸ்லாமிய நண்பர்களுக்காகவும், உலகம் முழுவதும் இருக்கிறவர்களுக்காகவும் ஜெபியுங்கள்.

இந்த 30 நாள் ஜெபமானது பல இடங்களில் முஸ்லீம் மக்களை கிறிஸ்துவை நோக்கி நடத்தியிருக்கிறது. 1000-க்கும் மேலான புதிய இஸ்லாமிய விசுவாசிகள் இயேசுவை கண்டுள்ளனர். முஸ்லீம் மக்களிடையே கடந்த 50 ஆண்டுகளில், கிறிஸ்துவை நோக்கி இயக்கங்கள் அதிகமாய் உருவாகியிருக்கிறது. இதே வேகம் தொடர்ந்து செயல்பட ஜெபிப்போம் (அப்போஸ்தலர் 2:17-21).

முஸ்லீம் மக்களிடையே கரிசனையாய் ஊழியம் செய்யும் கிறிஸ்துவின் வேலையாட்களும், பல கிறிஸ்தவ நிறுவனங்களும் எழும்ப ஜெபிப்போம். இத்தகைய கிறிஸ்தவ நிறுவனங்களோடு தொடர்பு கொள்ள விரும்பினால், மேலும், தகவல்களுக்கு எங்களை தொடர்புகொள்ளுங்கள்.
கைெழளுிசயல30னயலள.ழசப.

இயேசு கிறிஸ்து முஸ்லீம் மக்களை காண்கிறது போலவே நீங்கள் காணவும், இயேசுவின் இருதயத்தைப் போலவே உங்கள் இருதயமும் அவர்களை நேசிக்கவும், கிறிஸ்துவின் அண்டை அவர்களை வழிநடத்தும் ஒளியாக மாறவும், பரிசுத்த ஆவியானவரின் உதவியை நாடி ஜெபிப்போம்.



ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து,
பானம்பண்ணக்கடவன் (இயேசு).

யோவான் 7:37

# 30 நாட்கள்

## ஜெபக் கையேடு

இஸ்லாமிய உலகிற்கு ஜெபிக்க

**ஓர் அறைகூவல்**